# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,932—1970 නොවැම්බර් 12 වැනි බ්‍රහස්පතින්ද—1970.11.12

14,932 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு தொகுதியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுமாறு தனித்தனிப் பக்கங்கள் இடப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 1017 | ஆயத்துறைகளும், குத்தகை விற்பனைகளும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1046 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1048 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. . | 1052 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சகத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஹு யூன் மீ 2 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

---

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருந்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருந்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 169 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவுத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம் ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. AB. 108/X. 2302/70.

## கமத்தொழிற்றிணைக்களம்

### மிருக வைத்தியர் பதவி

கமத்தொழில் திணைக்களத்திலுள்ள மிருக வைத்தியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்கசேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 1970.11.26

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 1970.12.4.

குறிப்பு.—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்மாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் : இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவிகள் நிலையானவையும் உபகாரச்சம்பளமுடையவையுமாகும். இந்நியமனம் முதற்கண் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலையில் அமையும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

(i) இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மிருக வைத்திய விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு திரட்டிய சம்பளம்—ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 துவக்கம் ஆண்டொன்றுக்கு ரூபா 360 ஆன 12 ஏற்றங்களாலும் ரூபா 480 ஆன 5 ஏற்றங்களாலும் ரூபா 13,440 வரை உயரும்.

(1.10.1969 க்கு முன்னிருந்த தொடர்பான சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,080 ——12 × 360, 5 × 480— ரூபா 10,800).

குறிப்பு.—நன்கு மதிக்கப்படுமொரு தாபனத்திலே விதித்ததொரு பட்டதாரிப்பயிற்சி நெறியினைப் பின்பற்றுவோர் அல்லது இத்திணைக்களத்தால் விதிக்கப்படும் பரீட்சையிற் சித்தி பெறுவோர் மட்டும் ரூபா 11,040க்கு மேற்செல்ல அனுமதிக்கப்படுவர். (1.10.1969 க்கு முன்லிருந்த தொடர்பான சம்பளமுனை ஆண்டொன்றுக்கு ரூபா 8,400).

(ii) பிற பல்கலைக்கழகங்களின் மிருக வைத்திய விஞ்ஞானப் பட்டதாரிகள்—இவர்களுக்குரிய சம்பளம் திறைசேரியுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970.11.26 ல 22 வயதுககுக் குறையாமையும் 35 வயதுககு மேறபடாமையும் (அரசாங்க சேவையில் ஏறகனவே உளளோர் விடயத்தில் வயதின் மேலெல்லை கவனிக்கப்பட மாட்டாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் மிருக வைத்திய விஞ்ஞானப் பட்டம் உள்ளமை.

**குறிப்பு.**—இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இறுதிப் பரீட்சைக்குத் தோன்றி, முடிபு எதிர்பார்த்திருப்போரின் விண்ணப்பங்களும் கருத்துக்கெடுத்துக் கொள்ளப்படும். ஆனால் பல்கலைக்கழக பெறுபேறுகள் வெளியானவுடன் சித்தியடைந்துள்ளமை எனக்கு உடனே அறிவிககப்படுதல் வேண்டும். இல்லையேல், அவர்களின் விண்ணப்பங்கள் தள்ளுபடியாகும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) கல்விச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சானறிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிகசத் தவறும் அபேட்சகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைககளத் தலைவாகளுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள தாம் விணணப்பம அனுப்பிய திகதியை அரசாஙக சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணபபக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எநத உததியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறிமிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெறறமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணபபகாரர் தம் விணணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1.
1970 ம் ஆண்டு நொவெம்பர் மீ 5 ந் உ.

11–393/1—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

இல : A. 94 /X. 2303/70

## கல்வி அமைச்சு

### பிரதம வித்தியாதிகாரி (மனையியல்) பதவி

கல்வி அமைச்சிலுள்ள பிரதம வித்தியாதிகாரி (மனையியல்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, “ செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 ” என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 26.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 4.11.1970.

**குறிப்புகள்.**—

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்,

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிககப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரிகள் விதவைகள் அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் சேமலாப நிதி நலன்களுக்கு உரித்துடையவராவர் ; இதன்பொருட்டு தனது சம்பளத்தில் 5%தை அவர் அரசினர் சேவை சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யமுன் தொடர்ந்து சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நிதி நலனுடைய ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் அவர் ஏற்கெனவே 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருப்பின் நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் அவர் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) நியமதாரி, முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கெனவே வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்கு பதில் கடமைபுரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகரை நியமனத்தில் உறுதிப்படுத்தல் ஏனைய விடயங்களுடன் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள், கல்விச் சட்டம், நிதி விதிகள் ஆகியவற்றில் வினாத்தாள்களைக் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமைபுரியும் காலத்தில் இப்பரீட்சையில் சித்தியெய்தாவிடின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாக விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்,

(iv) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் நியமனத் திகதியிலிருந்து 4 வருட காலத்துக்குள் பொது எழுதுவினைஞர் சேவை நிறைவேற்று வகுப்பு இரண்டாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மொழிகளிலான—சிங்களத்தில்/தமிழில்—ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். இப்பரீட்சையில் சித்தி செய்தற்கு அனுமதிக்கப் பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் நியமனம் உறுதிப்படுத்தப் படமுன் தகுதிகாண்—பரீட்சார்த்த காலத்தில் மகா வித்தியாதிபதிக்குத் திருப்தியளிக்கும் முறையில் பின்வருவன பூர்த்திசெய்யப்பட வேண்டும்:

(அ) மகா வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்படுதற்கமையத் தெரிவு செய்யப்படும் துறையில் ஆரம்ப அல்லது உயர்தர மட்டத்தில் கல்வி நிருவாகத்தில் கல்வி அமைப்பில் ஏற்பட்டுள்ள சமீபகால அபிவிருத்திகள் பற்றி நுணுக்கமாய்ப் படித்தல் ;

(ஆ) மேற்போந்த (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிப்பால், பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவத்தை இலங்கைக்கேற்ப, எங்ஙனம் பிரயோகிக்கலாமென்பது பற்றிய ஒரு பிரமான கூற்றைச் சமர்ப்பித்தல்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—புதிய முறைப்படி நியமிக்கப் படுபவர்களுக்கு—ரூ. 11,040—11 × 480— ரூ. 16,320 வருடாந்தம். ரூ. 14,880 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஆ) 1970.11.26 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) குறைந்தபட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக மனையியல் பட்டதாரியாகவும் பாடசாலைகளிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும் அல்லது பாடசாலை களில் அல்லது ஆசிரியர் கலாசாலைகளில் மனையியல் திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் நிருவகித்தலிலும் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

அல்லது

நிருவாகத்தில் 5 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற் றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தால் வழங்கப்படும் மனையியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவராகவும் மனை யியல் கற்பித்தலிலும் மனையியல் திட்டங்களை ஒழுங்கு செய்வதி லும் நிருவகித்தலிலும் 15 வருட அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

(ஈ) தனது கருமங்களைப் புரியும் மொழி மூலம் சி. பா. த./க. பொ. த. ப. பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் மொழியில் அல்லது இலக்கியத்திலான வினாப்பத்திரங்களில் சித்தியடைந் திருக்க வேண்டும்.

**குறிப்பு.**—கல்வி ஆலோசகர் அந்தஸ்திலுள்ளவர்களும் மனையியல் கல்வி முயற்சிகளின் நிருவாகத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் உட்பட மனையியல் கல்வி சம்பந்தமான கருமங்களில் மொத்தம் 15 வருட சேவை புரிந்தவர்களுமான உத்தியோகத்தர்களும் இப்பத விக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண் டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு :**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை களுக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான் றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பா ளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

(ஊ) அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது :

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண் ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட் டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை " அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரி களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதி யிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 5 ந் உ.

11–393/2—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

இல. A 95/X.2304/70.

## கல்வி அமைச்சு

### பதவி : பிரதம வித்தியாதிகாரி, கைப்பணி

கல்வி அமைச்சிலுள்ள கைப்பணி, பிரதம வித்தியாதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள்.** இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும்:

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 26.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 4.12.1970.

**குறிப்புகள்**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத் தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக் சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்**.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.—(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரி விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர். இந்நோக்கத்துக்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% வீதம் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளவிதிகளின் கீழ் ஆசிரியராக அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் 6 மாதகாலத்துக்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் :

(ii) நியமனம், முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும். நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் முதற்கண் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார் ;

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல் ஏனைய விடயங்களுடன் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளும் நிர்வாக விதிகளும், கல்விச் சட்டம், நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றில் வினாக்களைக் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தி அடைவதைப் பொறுத்ததாகும். விதிக்கப்பட்டுள்ள தகுதிகாண்/பரீட்சார்த்த பதில் கடமை புரியும் காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தி எய்தத் தவறின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாகவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத் திகதியிலிருந்து 4 வருட காலத்துக்குள் பொது எழுதுவினைஞர் சேவையின் நிறை வேற்று எழுதுவினைஞர் வகுப்பு II ஆந் தர உத்தியோகத்தர்களுக்கான சிங்கள/தமிழ் மொழியிலான பரீட்சையில் சித்தியடையவேண்டும். இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பதவியில் உறுதிப்படுத்தப்படு முன், தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமை புரியும் காலத்தில் மகாவித்தியாதிபதிக்கு திருப்தி அளிக்கும் முறையில் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கல்வி நிர்வாகத்தில் ஆரம்ப அல்லது உயர்தர மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஒரு துறையில் கல்வி அமைப்பும் அபிவிருத்தியும் ஆகியவற்றில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள விருத்திகளை மகா வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்படும் ஒரு முறையில் நுணுக்கமாய்ப் படித்தல் ;

(ஆ) மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிப்பின் அடிப்படையில், அப்படிப்புகளால் ஏற்படும் அனுபவத்தை மாற்றி அமைத்து இலங்கைக்கு ஏற்ப எங்ஙனம் பிரயோகிக்கலாமென விரிவாக விளக்குதல்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்**.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ஆறடொன்றுக்கு.

ரூ. 11,040—11 × 480—ரூ. 16,320/– ஆகும்.

ரூ. 14,880 பெறமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள்**.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.11.26 ஆந் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருப்பதுடன், தொழிற்றுறை அல்லது தொழிற்றுறைக்கு—முன்னையமட்டத்தில் தொழில் நுட்பக் கல்வி நிர்வாகத்தில் 10 வருடத்திற்குக்குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(ஈ) (i) ஐக்கிய இராச்சியத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் உயர்தர தேசிய தராதரப் பத்திரம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(ii) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் பூரண தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும், இவற்றுடன் 15 வருடத்துக்குக் குறையாத கைத்தொழில்/படிப்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவமும் பெற்றிருக்கவேண்டும் ;

(உ) தனது கருமங்களை எம்மொழியில் புரிகின்றாரோ அம்மொழியில் அல்லது இலக்கியத்தில் சி. பா. த./க. பொ. த. ப. பரீட்சையில் அல்லது பிற உயர்தரப் பரீட்சை எதிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) கல்வி ஆலோசகராக 3 வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது 1 ஆந் தர அதிபராக அல்லது கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபராக 5 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும் ;

(எ) கைப்பணி படிப்பிப்பதில்/நிர்வாகத்தில் அல்லது இவ்விரண்டிலும் குறைந்த பட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு** :—தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்பு கொண்ட 10 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்துள்ள கல்வி ஆலோசகர் அந்தஸ்துடைய உத்தியோகத்தர்கள் அல்லது தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்பு கொண்ட 15 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்துள்ள தொழில் நுட்ப நிலைய சிரேஷ்ட (தொழில்) போதனாசிரியர்கள் அந்தஸ்துடைய உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர் ; கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

(ஊ) மேலுள்ள 4 (இ), (ஊ), (எ) ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள்.

**குறிப்பு** :—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச்சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விணணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970 ம் ௵ நவம்பர் மீ 5 ந உ.

11–393/3—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,932

---

இல. AB. 112/X. 2305/70

## நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு

### பணிப்பாளர் (ஆளணி நிர்வாகமும் கைத்தொழில் தொடர்பும்) பதவி

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் பணிப்பாளர் (ஆளணி நிர்வாகமும் கைத்தொழில் தொடர்பும்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரிக்கு 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—
இப்பதவி தற்காலிகமானது. (நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்).

3. **சம்பளமும், படிகளும்.**—
இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : ரூபா 20,640 —2 × 600 — ரூபா 21,840 வருடாந்தம்.

(குறிப்பு.—1.10.69 இற்கு முன்பு அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 17,400 — 2 × 600 — ரூபா 18,600 வருடாந்தம்).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டல் வேண்டும் :

(அ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரியாய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடல் நலமும் உள்ளவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) அரசாங்க சேவையில்/அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தில்/அல்லது வர்த்தக நிறுவனத்தில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் ஆளணி நிர்வாகத்திலும், கைத்தொழில் தொடர்பிலும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களத்தில் போதிய தகைமை உள்ளவராய் இருத்தல் வேண்டும்.

(உ) 30 வயதிற்கு குறையாதவராயும், 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் (இவ் வயதெல்லை அரசாங்க ஊழியர்களுக்கும், அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இயையுடையதன்று).

5. விண்ணப்பதாரிகள் தங்களது தகைமைகளை காட்டும் தகைமைச் சான்றிதழ்களை காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. விண்ணப்பங்களை அரசாங்க/அரசாங்க கூட்டுத்தாபன தலைவர்களுக்கூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமாக வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ௵ நவெம்பர் மீ 5 ந உ.

இல. AB.112/X.2305/70

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு

### பணிப்பாளர் (ஆளணி நிர்வாகமும், கைத்தொழில் தொடர்பும்) பதவி

1. பெயரும், பதவிப் பெயரும் : ————.
2. முகவரி : ————.
3. வயதும், பிறந்த திகதியும் : ————.
4. கல்வித் தராதரம் : ————.
5. சிங்களத்தின் தேர்ச்சி : ————.
6. ஆளணி முகாமையில் தராதரம் : ————.
7. ஆளணி நிர்வாகத்திலும், கைத்தொழில் தொடர்பிலும் உள்ள அனுபவம் : ————.
8. சேவையின் விபரங்கள், நியமனத் திகதியிலிருந்து, ஏற்றங்கள் : ————.
9. தற்போதைய வேதனமும், கடைசி சம்பள ஏற்றத் திகதியும் :————.
10. இப்பதவிக்கான வேறு விசேட தகைமைகள் ஏதும் இருப்பின் : ————.

————,
ஒப்பம்.

திகதி : ————.

11–393/4—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,932

இல. : வெ. மு/2/221

## கல்வி அமைச்சு

### பிரித்தானிய மன்றப் புலமைப் பரிசில்கள்—1971/72 ஆம் ஆண்டு

ஐக்கிய இராச்சியத்தில் 1971 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் படித்தற்குப் பிரித்தானிய மன்றத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில் களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெகுமதி கள் பின்வரும் கற்கைத் துறைகளிலாகும் :—

(அ) ஆங்கிலத்தைப் பிறமொழியாகக் கற்பித்தலில் 2 புலமைப் பரிசில்கள் ;

(ஆ) பன்மொழியியலில் பட்டப்பின் படிப்புக்கான ஒரு புலமைப் பரிசில்.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவ ரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2. கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 10 மாத கால அளவினவையாகும். எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றிக் கல்லூரியில் அல்லது வித்தியாசாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐக்கிய இராச்சிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்பப் புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப் படலாம்.

**3. தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.10.71 அன்று 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட வயதினராய் இருக்க வேண்டும். (பெற்றுள்ள அனுபவம், அல்லது வகிக்கும் நிலைமை காரணமாக அபேட்சகர்கள் எவரேனும் விசேட தகுதியுடையவராய் இருப்பின் ஆங்கிலத் தைக் கற்பித்தல் சம்பந்தமான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் மாத்திரம் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை 40 வயதாக உயர்த்தப்படக்கூடும்).

(iii) ஆங்கிலத்தில் (எழுதுவதிலும் பேசுவதிலும்) உயர்தர தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) (அ) ஆங்கிலம் கற்பித்தற்கு விண்ணப்பிப்பவராயின்.—மேலுள்ள (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்படுள்ள தகைமைகள் பெற்றிருப்பதுடன் பின்வரும் வகுதிகளில் எதிலேனும் ஒன்றில் அடங்க வேண்டும் :

(1) க.பொ.த. (உயர்தர) பத்திர பரீட்சையில் அல்லது இலண்டன்/இலங்கை இடைமானிக் கலைப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி எய்தியவரும் 1.10.1971 அளவில் பாடசாலைச் சேவையில் அல்லது கற்பித்தற் சேவையில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்றுள்ளவர்களுமான பிரதம வித்தியாதிகாரிகள், கல்வி ஆலோசனையாளர்கள் அல்லது வட்டார வித்தியாதிகாரிகள் ; அல்லது

(2) (அ) விசேட ஆங்கிலப் பயிற்சி அல்லது உயர்தர (பொதுநெறிகள்) பயிற்சி பெற்ற ஆசிரியராக அல்லது (ஆ) க.பொ.த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் அல்லது இலண்டன்/இலங்கை இடைமானிக் கலைப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியெய்திய பட்டதாரிகளுமாக இருப்பதுடன் ஆங்கிலம் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுமான ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் அல்லது பயிற்சி ஆசிரியர்கள்/ஆசிரி யைகள் இவர்கள், மேலும் 1.10.71 அளவில் குறைந்த பட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(3) 1.10.71 அளவில் குறைந்த பட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ளவர்களும ஆங்கிலத்தைப் பிற மொழியாகக் கற்பித்தலில் வாராந்தம் 10 மணித்தி யாலங்களுக்குக் குறையாமல் தற்போது ஈடுபட்டுள்ளவர் களுமான, பட்டப் பரீட்சைக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்த பட்டதாரி ஆசிரியர்கள்.

(ஆ) பன்மொழியியலில் பட்டப்பின் படிப்புக்கு விண்ணப்பிப்பவ ராயின்—மேலுள்ள (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம் உபபந்தி களில் குறிப்பிடுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் 1.11.71 அளவில் பல்கலைக் கழகம் ஒன்றில் கற்பித்தலில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்ற, ஆங்கிலத்தில் விசேட பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும்.

குறிப்பு.—விதிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தின் கீழ், அல்லது ஒரு சபையில் கூட்டுத்தாபனத்தில், பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையத்தில் சேவை புரிவதாக ஒரு முறி அல்லது உடன்படிக்கை செய்துள்ள ஓர் அபேட்சகர் 1.10.71 அளவில் முறியில், அல்லது உடன்படிக்கையில் விதிக்கப் பட்டுள்ள கால சேவையைப் பூர்த்தி செய்து முறியில் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை முற்றாக நிறைவேற்றியிருந்தாலன்றி விண்ணப்பித்தற்கு உரித்துடைய ராகார்.

**4. அளிப்பு நிபந்தனைகள்.**—புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நலன் கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) ஐக்கிய இராச்சியத்துக்குப் போய்வர, பயணச் செலவு ;

(ஆ) சொந்தத் தாபரிப்புச் சகாயப்படி ;

(இ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்கும் வருடாந்தம் £25 கொடை ;

(ஈ) கற்கைக் கட்டணம் ;

(உ) ஐக்கிய இராச்சியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணத்துக்கான செலவு.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங் களுக்கும் அமையும்.

**5. நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

**6. உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங் கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாச மாகவும் விவேகமாகவும் பின்பற்றித் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத் துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரை யில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

**7. வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்ளத்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா எனப் பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்ற வராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீளக்கப் படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத் துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப் படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்ளதல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நிய மனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

6. தரவாரித்திட்டம்

க. பொ. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் ஆறுபாடங்களில் பெறப்பட்ட தரங்களின் பொருட்டு ஒதுக்கப்படும் புள்ளிகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| டி—விசேட சித்தி | .. | 75 புள்ளிகள் |
| சி—திறமைச்சித்தி | .. | 50 புள்ளிகள் |
| எஸ்—சாதாரண சித்தி | .. | 40 புள்ளிகள் |

ஆறுக்கு மேற்பட்ட பாடங்களில் தோன்றிச் சித்தியடைந்தவர்கள் ஆறு பாடங்களுக்கு மாத்திரம் தோன்றிச் சித்தி அடைந்தவர்கள் பெறும் மொத்தப் புள்ளிகளிலும் பார்க்கக் கூடுதலாகப் பெறும் மொத்தப் புள்ளிகளைத் தவிர்த்தற்பொருட்டுப் பரிசீலனை செய்யப்பட வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் ஆறுபாடங்கள் என வரையறுக்கப்படும்.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒருவர் மேலதிகமாக 30 புள்ளிகள் பெற உரித்துடையவராவர். எனினும், க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்தவர்களுக்கு அல்லது திறமைச் சித்திகள், விசேட சித்திகள் முதலியனபோன்று இப்பாடங்களிற் பெறப்பட்ட தரத்தின் பொருட்டுப் புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. இளங்கலைஞர் பட்டம் அல்லது ஏதாவது உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் கொடுக்கப்படும். இது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மேலதிகமாக 30 புள்ளிகளையும் உள்ளடக்கும். இளங்கலைஞர் பட்டத்தினை உடைய பரீட்சார்த்திகளுக்கு க. பொ. த. (உயர்தரம்) இற்காக மேலதிக புள்ளிகள் ஒதுக்கப்படமாட்டாது. இங்கு குறிப்பிடப்படாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது ஏதேனும் கல்வித் தகைமையின் பொருட்டு மேலதிக புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட தரவாரியான திட்டத்திற்கு இணங்க விண்ணப்பப் படிவத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூடுகளில் பரீட்சார்த்திகள் தாமாகவே புள்ளிகளைத் தரப்படுத்தவேண்டும்.

7. நேர்முகப் பரீட்சை

மேற்போந்த தரவாரித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் குறித்தொதுக்கிய புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட்டதும் பின்னர் பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியே அறிவிக்கப்பட வேண்டிய திகதியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கீழேயுள்ள 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். கிராமசேவகர் சேவைக்கான பரீட்சார்த்தியின் தகுதியை மதிப்பிடுவதுடன் கிராமத்திற்குத் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாக அவரது அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் வினவப்படுவதுமே இந்நேர்முகப் பரீட்சையின் நோக்கமாகும்.

8. சேவை நிபந்தனைகள்

அரசாங்க வர்த்தமானி பகுதி 1 பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையனவுமாகும். விதவைகள் அநாதையர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு உதவுதொகைகள் செலுத்தப்படவேண்டும்.

(iii) அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தினை நோக்கத்தின்பொருட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி அரசாங்கசேவைக்குப் புதியவராக இருப்பின் —

(அ) அவருடைய தகுதிகாண் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தினதும், அரசகரும மொழிக் கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கும் அமைய இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்கு உட்படுதல் வேண்டும்.

(இ) தகுதிகாண் காலத்தில் அரசகரும மொழியில் —சிங்களத்தில்— தொழில் ஆற்றும் அறிவை அவர் பெறல் வேண்டும்.

(ஈ) தகுதிகாண் கால முடிவில் அவரது வேலையை உறுதிப்படுத்தல் பிறவற்றுக்கிடையில் அவர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரச் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளை முறையே நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்கிடையில் (அல்லது பொருத்தமான போது 1 ஆம் 2 ஆம் தரங்களை முறையே ஒரு வருடத்திலும், இரண்டு வருடத்திலும்) அவர் சித்தியெய்துவதிலேயே தங்கி உள்ளது. விதிக்கப்பட்ட காலத்திற்குள் இத் தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறின், ஆண்டேற்றங்கள் இடைநிறுத்தப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திற்கு மேலும் ஆறு மாத காலத்திற்குள் சோதனையில் சித்தியடையாவிட்டால் இடைநிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும். அப்படியான நிறுத்தம் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் தேர்ச்சிபெறும்வரை அல்லது கீழே பந்தி (iii) (உ) இல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட காலம்வரை நடைமுறையில் இருக்கும்.

(உ) தகுதிகாண் கால முடிவில் சிங்களத் தேர்ச்சியில் குறிப்பிட்ட தரத்தைப் பெறுவிடின் 120 ஆம், 121 ஆம் நிருவாகப் பிரமாணங்கள் பொருத்தமுடையனவாகும்.

மேலே (இ), (ஈ), (உ) இல் உள்ள நிபந்தனைகள் சிங்கள மொழி மூலம் சேவையிற் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தா.

(ஊ) கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நிருவாக மாவட்டத்தின் எக்கிராம சேவகர் பிரிவுக்கும் இடமாற்றத்திற்குள்ளாவர்.

(எ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் யாவரும் அவர்களின் நியமனத்தின் பின் செய்யவேண்டிய கடமைகளில் பயிற்சி பெறல் வேண்டும். தகுதிகாண் கிராம சேவகர்களின் நியமனங்கள், பரீட்சார்த்தி திருப்திகரமாகத்தனது பயிற்சியை பூர்த்தி செய்துள்ளார் என்றும், தற்காலிக கிராம சேவகர்களாக நியமனஞ் செய்யப்படுவதற்கும் சகல முறைகளிலும் தகுதி உடையவர் என்றும் குறிப்பிட்டு நிருவாக மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பேரிலேயே செய்யப்படும்.

ஆரம்பத் தெரிவின்போது இப்பரீட்சார்த்தியின் பயிற்சிக்காலம் மூன்று மாதங்களுக்கு மேற்படாது என்பதுடன், எல்லாப் படிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 50 ரூபா என்ற விகிதத்தில் பயிற்சி பெறுவோருக்கும் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்தில் பரீட்சார்த்திகள் விடுமுறைச் சலுகைக்கு உரித்துடையராகார்.

(ஏ) பயிற்சிக்குப் பின் கிராமசேவகர் ஒருவர் கிராமசேவகராக மூன்றாண்டுச் சேவையைப் பூர்த்தியாக்கும்வரை அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது. மேலும், அவர் உறுதிப்படுத்தப்படவேண்டுமென அரசாங்க அதிபர் திருப்தி அடையும் வரையும் அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது.

9. விண்ணப்பங்கள்

(i) இக்கச்சேரியிலிருந்து அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் அலுவலகம் எதிலிருந்தும் விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளலாம். மேற்போந்த 4 (iv) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தகுதிப் பரீட்சையை எம்மொழியில் சித்தியடைந்தார்களோ அம்மொழியில் அல்லது தமது விருப்பத்தின் பேரில் சிங்கள மொழியில் தம் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சார்த்திகள் நிரப்புதல் வேண்டும் விதிக்கப்பட்ட படிவத்தைப் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் திருத்தஞ் செய்தற்குத் தடுக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள், அரசாங்க அதிபர், கச்சேரி கேகாலை என்னும் முகவரிக்கு 1970 ஆம் ஆண்டு தெசம்பர் 14 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையத்தக்கதாகப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்கசேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை நேரடியாக அரசாங்க அதிபருக்குக் குறிப்பிட்ட திகதியில் இடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பிரதியொன்று விண்ணப்பதாரரின் திணைக்களத் தலைவருக்கூடாகவும் அனுப்பப்படல் வேண்டும்.

(iii) குறிப்பிட்ட தேதியின் பின்னர் இடைக்கப்பெறும் விண்ணப்ப மெதுவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அல்லது கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

10. தகைமைச் சாதனங்கள்

(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப்படலாகாது, கோரப்பட்டவாறான படிவத்தில் தேவையான விபரங்கள் தரப்படுதல் வேண்டும். இவ்வகையில் நிறைவாக இல்லாத ஒரு விண்ணப்பம், அதன் சொந்தத் திறமைகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுவதோடு, நிராகரிக்கவும்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தகைமையடைந்த பரீட்சார்த்திகளிடமிருந்து தகவுத்திறனை நிருப்பிப்பதற்கு சாதனச் சான்று காட்டுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டால், சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமானவையாகும்.

(அ) நற்பண்புச்சான்றிதழ்,

குறிப்பு.—பரீட்சார்த்தி ஒருவர் அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையில் இருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையில் இருந்து அண்மையில் விலகி இருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்சான்றிதழைப்

பெறுதல் வேண்டும் ; அவ்வாறில்லாதவிடத்து அதைச் சமாதான நீதவான், வழங்க்குரைஞர் (அப்புக்காத்து) வழக்கறிஞர் (பிரக்கராசியார்) அல்லது நொத்தாரிசு, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது ஆண்டுக்குத் திரட்டிய சம்பளமாக 4800 -ரூபா அல்லது அதற்கு மேற் பெறும் ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளக்கூடியவருமான யாரேனுமொருவர் ஆகியவர்களில் எவராவது ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். சான்றிதழ் வழங்குபவரின் பெயர் பதவிப் பெயர், முகவரி ஆகியவை தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஏற்கெனவே அரசாங்கசேவையிலுள்ள பரீட்சார்த்திகள் நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார். ஆனால், அவர்கள் தமது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமானவை என்றும், நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டால் அவர்களைச் சேவை ஒப்புக்கொள்ளவிட முடியுமென்றும் கூறுமொரு சான்றிதழைத்தமது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட வயதுச் சான்றிதழ், உத்தேச வயதுச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க மட்டுமே முடிந்த எப்பரீட்சார்த்தியினதும் பிறந்த திகதி, அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த ஆண்டின் யூலை 1 ஆம் திகதியாகக் கருதப்படும்.

குறிப்பு.— (i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேடப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட பிரித் தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) சத்தியக்கடுதாசிகளோ ஞானஸ்நானச் சான்றிதழ்களோ பிறப்புச்சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் பரீட்சார்த்தி விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/பெயர்களிலிருந்து வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெரைத் திருத்துவதற்கு, விடயத்திற்கேற்றவாறு (110 ஆம் அத்தியாயமாம்) பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்கசேவையில் நிரந்தரமான பதவிகளை, 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 394 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தமது பெயர்களை மாற்றியுள்ளவர்களுமான பரீட்சார்த்திகள் திருத்தப்பட்ட பிறப்புப்பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவுசெய்யப்பட்டதற்குரிய பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவழியினர் என்னும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான உத்தியோகபூர்வமான மூலக்கடிதம் (ஏற்புடைய விடத்து)

(ஈ) கல்வித்தகைமை பற்றிய மூலச் சான்றிதழ், அல்லது சான்றிதழ் வழங்கப்படாதவிடத்து, பிற உத்தியோகபூர்வமான சாதனங்கள், எடுத்துக்காட்டாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட இலங்கை க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சைப் பெறுபேற்று நறுக்கு அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற மூலக்கடிதம்.

(உ) மேலே 4 vi இன் கீழ் உள்ள தகைமையினை நிரூபிக்கும் சான்றிதழ்கள்

(iv) விண்ணப்பம் செய்யும்போதே தேவையான சாதனங்கள் யாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு மதியுரை கூறப்படுகின்றது. நேர்முகப் பரீட்சையின்போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாதிருக்கும் அல்லது அவற்றைச் சமர்ப்பிக்கத் தாமதிக்கும் பரீட்சார்த்தியினது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11. பொய்யான விபரங்கள் கொடுப்பதற்குரிய தண்டனை

இவ்வறிவிப்பில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவராகக் காணப்பட்டால் தெரிவு செய்தற்கு முன்போ தெரிவு செய்தபின்போ எந்நிலையிலாவது அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாகும்.

பரீட்சார்த்தியொருவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எவையேனும் அவரறிந்தவரையில் பொய்யெனக் காணப்பட்டால், அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால் அல்லது அவரின் சேவைக்காலத்தில் எப்பொழுதாவது அவர் விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென்று நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையில் இருந்து உடனே நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

இவ்வறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகாதோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மருத்துவப்பரிசோதனை

நியமனத்தின்பொருட்டுத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கேற்ற உடற்தகுதி அவர்களுக்கு உண்டென்பதைக் காட்டுவதற்கு மருத்துவப் பரிசோதனையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் தவறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

13. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயமும் அரசாங்க அதிபரின் தற்றுணிபின்படி நிர்மாணிக்கப்படும்.

கே. எச். ஜே. விஜயதாச,
அரசாங்க அதிபர்,
கேகாலை.

கச்சேரி, கேகாலை,
திகதி. 3.11.1790.

11—395—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

எனது எண். சீ./1

## இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைப் பணிப்பாளரும் இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைச் சபைச் செயலாளரும் பதவி

இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைப் பணிப்பாளரும் இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைச் சபைச் செயலாளரும் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்பவராகச் சான்று காட்ட வேண்டும் :—

(i) வம்சாவழியாக அல்லது பதிவு காரணமாக இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(iii) 30.11.70 அன்று 35 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் ;

(iv) (அ) நூல் நிலையவியலில் லண்டன் முதுமாணிப் பட்டம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது சமமான அல்லது உயர்ந்த நூல்நிலையவியல் தகைமைகள் பெற்றவராய் இருக்க வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் 1 ஆம் அல்லது 2 ஆம் (மேற்றர) வகுப்பு மானிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது மேலுள்ள (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மாணிப்பட்டமும் யாதேனும் பட்டப்பின் தகைமையும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நூல்நிலையச் சங்கம் ஒன்றின் இணையுரிமைத் தகைமை பெற்றவராய் அல்லது நூல்நிலையவியல் சம்பந்தமான போதிய உயர்தொழில்சார் வெளியீடுகள் பிரசுரித்தவராய் இருக்க வேண்டும்.

(இ) உயர்தொழில் தகைமைகள் பெற்றபின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் நூல் நிலைய வேலையில் குறைந்தபட்சம் ஏழு வருட அனுபவம் பெற்றவராய் இருக்க வேண்டும்.

3. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 1,750—10 × ரூபா 50—ரூபா 2,250.

4. சேவை நிபந்தனைகள்

(i) இப்பதவி நிரந்தரமானது ; தெரிவு செய்யப்படும் அபேட்சகர் கூட்டுத்தாபனங்களின் பிரமாணங்களுக்கமைய சேமலாப நிதி நலன்களுக்கு உரித்துடையவராவர்.

(ii) நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் காரியப்படுத்தற் பொருட்டு தற்போது நடைமுறையிலுள்ள அல்லது எதிர்காலத்தில் ஆக்கப்படக்கூடியனவான யாதேனும் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஒழுக வேண்டும். நியமதாரி தகுதிகாண் கால முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன் அரசகரும மொழித் தேவைகளுக்கமைய அவர் ஒழுகுதலைப் பொறுத்ததாகும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், சபையால் ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடியனவான விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய வேண்டும்.

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், சபையால் வேண்டப்படுமிடத்து, சபையால் தீர்மானிக்கப்படும் அளவுக்கும் முறையிலும் பிணை செலுத்தவேண்டும்.

5. **அரசாங்க சேவையில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள்.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் 1963 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 20 ஆந் திகதிய 666 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கமையவே சீர்தூக்கப்படும் ; அத்தகைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர் மூலம் அனுப்பவேண்டும்.

6. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர் உடல் தகுதி உடையவரா என்பதைத் தீர்மானித்தற் பொருட்டு வைத்திய பரீட்சை ஒன்றில் தேற வேண்டும்.

7. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

8. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் எதுவேனும் பிழையாகக் காணப்படின், தெரிவு நடைபெறுதற்கு முன்னாராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு நடைபெற்ற பின்னராயின் நியமனம் நிறுத்தப்படுதற்கும் அபேட்சகர் பாத்திரராவர்.

9. அபேட்சகர் தெரிவில் எவரினதும் ஆதரவை எம்முறையிலேனும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தல் அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

10. அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஒன்றும் விநியோகிக்கப்படமாட்டா. கல்வித் தகைமைகள், உயர்தொழில் தகைமைகள், அனுபவம் வயது, சிங்கள மொழியில் பெற்றுள்ள தேர்ச்சி ஆகியவை பற்றிய பூரண விபரங்களைக் கொடுக்கும் விண்ணப்பங்கள் சமீப காலத்தில் பெற்றுள்ள இரு குணச்சான்றிதழ்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், அனுபவம் பற்றிய அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் " தலைவர், இலங்கைத் தேசிய நூலநிலையச் சேவைச் சபை, இல. 10, சல்பியா தோட்டம், கொழும்பு 3 " என்ற விலாசத்துக்கு **1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று** அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

11. **கடல்கடந்த விண்ணப்பங்கள்.—கடல்கடந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதி 7.12.70 ஆகும்.**

கடல்கடந்த விண்ணப்பங்கள் மேற்குறித்த விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக விமான மூலம் கடிதப் பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்,
இலங்கைத் தேசிய நூலநிலையச் சேவைச் சபை.

இல. 10, சல்பியா தோட்டம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 1 ந் உ.

11-417—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

**பிரதான பொறியியலாளர் (பாதையும் வேலையும்) பகுதியில் வரைவாளர் தொழில் பயிலவோர் (குடியியல) பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்—1970.**

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் வரைவாளர் தொழில் பயில்வோர் (குடியியல்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளமும் படிகளும்.**—(i) ஒரு தொழில் பயில்வோரின் தொடக்கச் சம்பளம் வருடத்துக்கு ரூபா. 3,090. பயிற்சிக் காலங்கள் இரண்டு வருடங்கள் அல்லது தேவைப்பட்டால் அதற்கு மேலும்.

(ii) தொழிற் பயிற்சியை சித்தியுடன் முடித்தவுடனும், விதித்த பரீட்சைகளில் சித்தியடைந்தவுடனும், பயிற்சியாளர்கள் (II) ம் தர வரைவாளர்களாக நியமிக்கப்படுவர். (II) ம் தர வரைவாளர் பதவிகளில் காலி இடங்கள் இல்லாவிட்டால் மேலதிக வரைவாளராக (II) ம் தர வரைவாளர் சம்பளத்தில் நியமிக்கப்படுவர்.

(iii) வரைவாளர்களின் சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

தரம் (II) ரூபா 3,432—144—ரூபா 6,456—(வருடத்திற்கு).

தரம் (I) ரூபா 6,600—180—ரூபா 8,040 (வருடத்திற்கு).

விசேட தரம் ரூபா 8,280—240—ரூபா 9,240 (வருடத்திற்கு).

தரத்திலிருந்து தரத்திற்கு உயர்ச்சி, காலி இடங்களையும் முதுமுறையையும், தகுதியையும், அந்நேரத்திலுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் பொறுத்து இருக்கும்.

3. **வயதெல்லை.**—அபேட்சகர்கள் நல்ல தேகநலமுடையவராயும், விவாகமாகாதவராயும், விண்ணப்பங்கள் ஏற்க நியமிக்கப்பட்ட கடைசித் திகதியன்று 16 வருடங்களுக்கு குறையாதவராயும் 24 வருடங்களுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வி தொழிநுட்பத் தகைமைகள்.**—அபேட்சகர்கள் சித்தியடைந்திருக்க வேண்டியது—

(அ) தூயகணிதம் அல்லது பிரயோக கணிதமும், பௌதிகவியலும் உட்பட சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை ; அல்லது

(ஆ) சிங்களம்/தமிழ் பாஷை, தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம், பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) ப் பரீட்சையில ; அல்லது

(இ) தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம், பௌதிகவியல் உட்பட ஒரு உயர்தரப் பரீட்சை.

அத்துடன்

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி கட்டுப்பெத்த பிரயோக தொழில்நுட்ப நிலையத்தில் ஒரு வருட முழுநேர வரைவுப் பயிற்சி நெறியில் தேர்ச்சியடைந்து ; தேர்ச்சிச் சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்.**—(அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சில காலத்திற்கு தொழில் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

(ஆ) தொழிற் பயிற்சிக் காலத்தில் அவர்கள் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகளுக்கு சமுகந்தந்து குறிப்பிட்ட பரீட்சையிலும் இன்னும் மற்றத் திணைக்களப் பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(இ) பயிற்சிக்காலம் முடிந்தவுடன் (II) ம் தர வரைவாளராய் நியமனம் பெற்ற பின்பு இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி பொது முகாமையாளருடன் ஒரு ஒப்பந்தத்திலும் முறியிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

(ஈ) திருப்தியான குணமில்லாவிட்டாலும் அல்லது பயிற்சியில் திருப்தியான முன்னேற்றம் இல்லாவிட்டாலும் அல்லது திணைக்களப் பரீட்சைகளிலும் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் பரீட்சைகளிலும் சித்தியடையாவிட்டாலும் அத்துடன் பயிற்சியைத் தொடர்ந்து நடத்துவதில் புகையிரதப் பகுதிக்கு நன்மை அளிக்காவிட்டாலும் ஒரு பயிற்சியாளரின் ஒப்பந்தத்தை முன்னறிவித்தல் இல்லாமல் முறித்துவிடக்கூடும்.

(உ) நியமனத்திற்கு முன் பயிற்சியாளர்கள் இலங்கையில் எந்தப் பகுதியிலும் சேவைசெய்ய தகுதியுடையவரென்பதற்கு அவர்கள் ஒரு மருத்துவச் சோதனையில் (கண் பரீட்சை உட்பட) சித்தி அடையவேண்டும்.

6. " பொது முகாமையாளர், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, மருதானை, " என்னும் விலாசத்தில் ஒரு தெரிவுச் சபைக்கு முன்னால் சமுகந்தரவோ அல்லது எந்த நேர்முகப் பரீட்சைக்கும் சமுகந்தரவோ பயிற்சியாளர்கள் தங்கள் செலவில் நியமனத்திற்கு முன்வரத் தயாராய் இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பம் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில், பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், தொழில்நுட்பக் கல்விச் சான்றிதழ், குணச் சான்றிதழ்கள் முதலியவற்றின் பிரதிகளுடன், 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்குப் பிந்தாமல், பொது முகாமையாளர், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு 10 என்னும் விலாசத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் காட்டிய விபரங்கள் ஏதேனும் பொய்யெனக் காணப்பட்டால் நியமனத்திற்குப் பின் விலக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதித்துவிட்டது என்னும் குற்றச்சாட்டு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரை விண்ணப்பங்களை தாமதம் செய்யும் அபேட்சகர்கள் அதனால் வரும் இடையூறுகளுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாவர்.

9. அரசாங்க சேவையில் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் பணிபுரியும் திணைக்களத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்பட்டால்தான் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. ஒரு அபேட்சகரின் தெரிவுக்காக ஆதரவு நாடப்படின் அல்லது வயப்படுத்தப்படின் அந்த அபேட்சகர் தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

11. அரசாங்க சேவையின் நியமனங்களுக்கான பொது நிபந்தனைகளை இந்த வர்த்தமானியில் பாகம் (I), பிரிவு (II) ல் பார்க்குக.

வீ. ரீ. நவரட்ண,
பதில் பொது முகாமையாளர்.

பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி,
மருதானை, கொழும்பு 10,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 5 ந் வ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வரைவாளர் பயிற்சியாளர் (குடியியல்) பதவி—1970**
**இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி**

1. முழுப் பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. முழு அஞ்சல் விலாசம் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)

3. தேசிய இனம் : ————.

(அ) பரம்பரை இலங்கையரா அல்லது பதிவுபெற்றதனால் இலங்கையரா என்பதைக் குறிப்பிடுக : ————.

(ஆ) பரம்பரை இலங்கையராயின் கீழ்க்காணும் விபரங்கள் தருக :—

(i) அபேட்சகரின் பிறந்த இடம் : ————.

(ii) அபேட்சகரின் தந்தையின் பிறந்த இடம் : ————.

(iii) அபேட்சகரின் தந்தைவழிப் பாட்டனாரின் பிறந்த இடம் : ————.

(iv) அபேட்சகரின் தந்தைவழி முப்பாட்டனாரின் பிறந்த இடம் : ————.

அபேட்சகர் இலங்கையில் பிறந்தவரென்றால் (i) உடன் (ii) ஐ உம், அல்லது (iii) ஐ உம், (iv) ஐ உம் நிரப்புதல் வேண்டும்.

அபேட்சகர் இலங்கையில் பிறக்கவில்லையென்றால் (i) உடன் (ii) ஐ உம் (iii) ஐ உம், அல்லது (iii) ஐ உம் (iv) ஐ உம் நிரப்புதல் வேண்டும்.

4. பிறந்த திகதி : ————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று வயது வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் : ————.

5. விவாகமானவரா ? அல்லது விவாகமாகாதவரா ? : ————.

6. தகைமைகள் : ————.
(விபரங்கள் கொடுத்த சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

7. கட்டுப்பெத்தையில் உள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு வருட முழுநேர வரைவுப்பயிற்சி நெறியில் தேர்ச்சியடைந்து, தேர்ச்சிச் சான்றிதழ் வைத்திருக்கின்றீரா ? என்பதைக் குறிப்பிடுக : ————.

8. புகையிரதப் பகுதி ஊழியரா அல்லது புகையிரதப் பகுதி ஊழியரின் மகனா என்பதையும் கூறவும் : ————.

புகையிரதப் பகுதி ஊழியரென்றால் பின்வரும் விபரங்கள் தருக :—

(அ) தற்போதைய தரமும், பகுதி இலக்கமும் (இருப்பின்) : ————.

(ஆ) தற்போதை இடம் : ————.

(இ) முதலாக நியமிக்கப்பட்ட திகதி : ————.

9. முன்பு இராணுவத்தில் இருந்தவரா அல்லது இலங்கையிலிருந்த ஐக்கிய இராச்சிய ஸ்தாபனங்களின் கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து விலகிய குடியியல் ஊழியரா என்பதைக் கூறவும் : ————.
(விபரங்கள் கொடுத்து அத்தாட்சி காட்டப்படுதல் வேண்டும்).

என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியளவில் இந்த விண்ணப்பத்தில் நான் கூறியுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை யென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்பு விதிகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கருதப்படின் என்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் நன்கு அறிவேன்.

————,
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி : ————.

11—419—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## பால் சபை

இச்சபையின் சேவைக்குரிய பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்துக்குச் சரியாக அமையத் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவை கீழ்க் கையொப்பமிடப்பட்டவரின் பெயருக்கு 1970.11.26 ஆம் தேதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

**கணக்காளர்—தரம் III**

**சம்பள அளவுத்திட்டம்.**—1,000—10 × 50—ரூபா 1,500 ஒரு மாதத்திற்கு (யாவும் உள்ளிட்டது).

**தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும்—

(அ) 1970.11.26 அன்று 45 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராயும் சிறந்த உடல்நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) (i) தத்துவம்பெற்ற, பதிவாக்கப்பெற்ற, இணைக்கப்பெற்ற அல்லது ஆக்கச்செலவுக் கணக்காளராகவோ ; அல்லது

(ii) அரசாங்க கணக்காளர் சேவையின் III ஆம் வகுப்புக்குரியவராயும் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வர்த்தக கணக்கியற்றுறையில் அனுபவம் பெற்றவராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகால சேவை அனுபவம் உள்ளவராதல் வேண்டும். அத்துடன் இலங்கை இணைக்கப்பட்ட கணக்காளர்கள் கணக்காய்வாளர்கள் சம்மேளனத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) இலங்கை இணைக்கப்பட்ட கணக்காளர் கணக்காய்வாளர் சம்மேளனத்தின் அங்கத்தவராகவோ அல்லது தத்துவக் கணக்காளர்கள் (இலங்கை) மத்திய சோதனையிற் சித்தியடைந்தவராகவோ இருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தக நிலையமொன்றில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் குறைந்த பட்சம் 5 ஆண்டு அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகள் :**

(அ) அரசாங்க சேவையில் உள்ளவர் தெரிவு செய்யப்பட்டால் நியமனத்தை ஏற்க முன்னர் அவர் தற்பொழுது அரசாங்க சேவையில் வகிக்கும் பதவியை ராஜினாமா செய்யப்படல் வேண்டும். அவர் அத்தகைய பதவியை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் ராஜினாமா செய்வாராயின் ஓய்வூதியக் குறிப்பின் 49 அ பகுதியின் நிபந்தனைகளின்படி சபையின் சேவைக்கு வரும்வரை சேர்ந்த ஓய்வூதியப்படிகள் உள்ளவராகவே இருப்பர். அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் 1965 ஆகஸ்ற் 20 ஆந் திகதி 666 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படியே ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி சுற்றறிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் அவ்வூதியோகத்தரை அரசாங்கத் திணைக்களத்திலிருந்து அல்லது கூட்டுத்தாபனத்திலிருந்து விடுவிக்க முடியுமா என்பதனை சம்பந்தப்பட்ட தலைவர்கள் குறிப்பாகவே குறிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நியமனம், விண்ணப்பதாரர்கள், ஏற்கனவே அரசாங்க சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர் ஆனவிடத்தன்றி, நியமனம் பெற்ற திகதி முதல் மூன்றாண்டுகள் தகுதிகாண்கால முடையதாக கணிக்கப்படும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தின் மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தவென வருங்காலத்தில் புகுத்தப்படக்கூடிய யாதொரு சட்டம் அல்லது ஒழுங்குவிதிக்கும் அமைய நடந்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுவர்.

(ஈ) தகுதிகாண் காலத்திற்குப் பின்னர் உறுதிப்பாடு, ஏனையவற்றுடன் ஒருவர் அரசகருமமொழித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் தங்கியுள்ளது.

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்டனர் சகாயவூதிய நன்மைகளைப் பெறவும் தகுதியுடையவர் ஆவர்.

4. **பிணை.**—தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூபா 7,500 பெறுமதியுள்ள பணமூலமான அல்லது ஒப்பந்தமூலமான பிணை வைக்கப்படல் வேண்டும்.

5. **வைத்தியப் பரீட்சை.**—நியமனம் பெற்றவர் கடமைகளை ஏற்றுக் கொள்வதற்கு முன் அரசாங்க மருத்துவ நிறுவனமொன்றின் வைத்தியப் பரீட்சையில் சித்தியெய்திக் கட்டாயப்படுத்தப்படுவர்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் படிகளை (மூலப் பிரதிகளை அல்ல) இணைத்தனுப்பவேண்டும் :—

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானப் பத்திரம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்விக்கழக/உயர்தொழில் தகைமைகள்.

(இ) இரண்டு நற்சாட்சிப்பத்திரங்கள். ஒன்று கல்விப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஆற்றிய கடமைகளின் தன்மை விளக்கப்படும் முன்னர் வேலை பார்த்த இடங்களில் பணிகொள்பவர்களால் அளிக்கப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள்.

7. விண்ணப்பங்களும் சம்பந்தப்பட்ட ஏனைய கடிதத்தொடர்புகளும் பால்சபையின் தலைவரிடம் அனுப்பப்படல் வேண்டும். இச்சபையின் எவ்வுத்தியோகத்தரின் சொந்த பெயருக்கு இவை அனுப்பப்படல் ஆகாது.

8. விண்ணப்பங்கள் யாவும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள்.

தலைவர்,
பால் சபை.

பால் சபை தலைமைக்காரியாலயம்,
33, எலிபாங்க் வீதி, கொழும்பு 5.

பால் சபை

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. பதவி : ————.
2. முழுப் பெயர் : ————.
3. தனிப்பட்ட முகவரி : ————.
4. விண்ணப்பதாரி பிறந்த திகதியும் இடமும் : ————.
5. விண்ணப்பதாரியின் தந்தை பிறந்த இடம் : ————.
6. மிக உயர்ந்த கல்வித் தகைமைகளும் உயர்ந்த தொழில் தகைமைகளும் : ————.
7. சிங்களத்திலும்/அல்லது/தமிழிலும் உள்ள புலமை : ————.
8. முன்னைய அனுபவம் பற்றிய விபரங்கள் : ————.
9. விண்ணப்பதாரியின் நல்லொழுக்கம் பற்றிய அத்தாட்சிப்படுத்தக்கூடிய இருவர்களின் பெயர்கள் : ————.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

11–399—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு (மோதற) பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கொழும்பு மோதற பகுதிக்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பமுடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுதாபன நிலையங்களிலும், இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 11ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நிச்சேட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1 ம் திகதி.

11—390—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## வவுனியா மாவட்டத்தில் நடுச்செட்டிகுளப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் வவுனியா தெற்குப் பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

நடுச் செட்டிகுளம் பிறப்பு, இறப்பு, பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 22 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. பெருமையினூர்,
மாவட்டப் பதிவாளர் (மேலதிக).

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், வவுனியா,
1970 ம் ஆம் ஐப்பசி மீ 27 ந் உ.

11–246—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## மட்டக்களப்புப் பெரும்பகுதியில் செட்டிபாளையம் பிறப்பு, இறப்புப் பிரிவிற்கும் மண்முனை தென் எருவில் போரதீவுப் பற்றுக்களின் பிரிவிற்கு விவாக (பொது) பதிவுகாரர் பதவி

செட்டிபாளையம் பிறப்பு, இறப்புப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவல

கங்களிலும் கிராமாந்தர நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸதானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் பதினைந்தாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால மூலம் அனுபபி வைத்தல் வேண்டும்.

தா. பாலசந்திரன்,
பெரும்பகுதிப் பதிவுகாரர் (மேலதிக)

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆம் ஒற்றோபர் மீ 30 ந உ.

11-247—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## மாத்தறை மாவட்டத்தில் டன்கொளுவ பிரிவிற்கு பிறப்பு, இறப்பும்; மொறவக் கோறளை மேற்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

டன்கொளுவ பிறப்பு, இறப்பு, பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிககின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும் போலீஸ் ஸ்தானம், சன சமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருககும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

திஸ்ஸ தெவேந்ரா,
மாவட்டப் பதிவாளர்.

மாத்தறை,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆம் நவம்பர் மீ 1 ந உ.

11-249—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் றிதிவிற்ற பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் அட்டகலன் கோறளை பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

றிதிவிற்ற பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எஸ். ஜீ. சமரசிங்க,
பெரும் பகுதிப் பதிவுகாரர்.

இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆம் ஐப்பசி மீ 31 ந உ.

11-268—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல.14,932

---

## கொழும்பு மாவட்டத்தில் றதாவான பிரிவிற்கு பிறப்பு, இறப்பு சியனு கோறளை கிழக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

றதாவான பிறப்பு, இறப்பு பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவுதிகதியன்று இருபத்தியொருவயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிசபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சேட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் திகதி.

11-294—12.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,932

## கொழும்பு மாவட்டத்தில் பியான்வில்ல பிரிவிற்குபிறப்பு, இறப்பு சியனு கோறளே மேற்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

பியான்வில்ல பிறப்பு, இறப்பு பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும்' ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 11 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்செட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு ஐப்பசி மீ 30 ந வ.

11-330—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### III ம் தரப் பரீட்சையாளர் பதவிகள்

மேற்படி பதவிகள் சம்பந்தமாக 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தைப் பார்க்க.

மேற்படி விளம்பரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 4 (ஆ) ம் பந்தியின் இறுதியில் "OR" என்று வாசிக்கப்படக் கூடியதாகவும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 10(11) முதலாம் பந்தி "(a) Date of appointment to General Clerical Service or allied services/Stenographers' transferable service/ Typists service :—" என்று வாசிக்கப்படக் கூடியதாகவும், திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 1970 நவம்பர் 26 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
அஞ்சல் பெட்டி இல : 515
சௌற் சதுக்கம்,
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 3 ம் வ.

11-332—12.11.70 ந் திகதிய வர்த்தமான இல. 14,932

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமசேவகர் வெற்றிடத்திற்காக, தொடர்ந்து மூன்று வருடங்கள் நிரந்தரமாக அம்பாறை மாவட்டத்தில் வசிப்பவர்களும், 21 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர்களுமான ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. தகைமை.— பரீட்சார்த்திகள் இலங்கையவராயும், சீரிய ஒழுக்கமுடையவர்களாகவும், ஒரு கிராம சேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல் நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. கல்வித் தகைமை.—(அ) இலங்கைச் சிரேட்ட பாடசாலையில் தராதரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண் கணிதம் அல்லது கணிதத்தில் சித்தியடைந்திருப்பதுடன், குறைந்தது நாலு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்று கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (சாதாரணம்) பரீட்சையில் குறைந்தது நான்கிலாகிலும் திறமைச்சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள், அதாவது கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்ந்த தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

4. இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாறற் சம்பளம் உடையனவு மாகும். மேலும் அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. அம்பாறை மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரிவுக்காரியாதிகாரி காரியாலயங்களிலும் அம்பாறை கச்சேரியிலும் விண்ணப்பப் பத்திரங்கள் 1970.11.15 ம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தகுதியான விண்ணப்பக்காரர்கள், சேவையைப்பற்றிய மேலதிக விபரங்களை மேற்கூறிய காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம். சம்பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் 1970.12.15 ம் திகதிக்கு முன்பு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஆர். பீ. வீரசேனா,
அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
அம்பாறை,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 3 ம் வ.

11-333—12.11.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கிராம சேவகர் சேவைப் பிரிவிலுள்ள வெற்றிடங்களுக்கு கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வெற்றிடங்கள்.—ஒவ்வொரு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவிலும் நிரப்பப்படவேண்டிய மதிப்பிடப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்களபத்து .. .. .. | ஒன்று (1) |
| மெத, எகொடபத்து .. .. | இரண்டு (2) |

3. சம்பளம்.—கீழேயுள்ள 8 (iii) (ஜீ) பந்தியில் விதிக்கப்பட்ட பயிற்சிக்காலத்தைப் பூர்த்தியாக்கிய பின்னர் கிராமசேவகர் சேவைக்கு நியமிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் ஆண்டொன்றிற்கு 3,000/- ரூபா சம்பள வீதம் ஆண்டுதோறும் 90/- ரூபாச் சம்பள உயர்வுகளுடன் 5,160/- ரூபாவாக உயரும் திரட்டிய சம்பளத்தில் நியமிக்கப்படுவர். இந்த அளவுத்திட்டத்தில் 3,810/- ரூபாவிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஒன்று நடைபெறும்.

4. தகைமை.—(1) பரீட்சார்த்திகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

*அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் எல்லா நோக்கங்களின் பொருட்டு "இலங்கையர்" என்னும் சொல் வம்சாவழியாக அல்லது பதிவுவழியாக இலங்கைப் பிரஜையாக இருப்பவர் எனப் பொருள்படும்.

(3) பரீட்சார்த்திகள் ஒரு கிராமசேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல்நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் (அ) இலங்கைச் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண் கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது நாலுபாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதமும் அல்லது வர்த்தக கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது நான்கிலாகிலும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும், அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தி யெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்ந்த தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் 1970.12.15 ஆந் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வயதிற்குக் கூடியவர்களாகவோ இருத்தலாகாது. அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(6) பரீட்சார்த்திகள் (அ) விண்ணப்பங்களுக்கான முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

இது கிராமசேவகரிடமிருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) அவர்கள் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். இது அவர்களின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தப்படல் வேண்டும், அல்லது

(இ) அவர்கள் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குக் கல்வி கற்றவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் கல்விகற்ற பாடசாலையின் அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்களின் மூலம் நிரூபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அரசாங்கத்தில் அல்லது கூட்டுத் தாபனங்களில் மாற்றத்துக்குரிய சேவையில் உள்ள பெற்றோர்களையுடைய பரீட்சார்த்திகள், பெற்றோர் ஒருவரின் பிறந்த இடத்தைத் தமது நிரந்தர வதிவிடமாகத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**5. தெரிவுசெய்யும் முறை.**—நியமனத்திற்கான பரீட்சார்த்திகள், கீழே 7 ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் காட்டிய செயல்திறனுடன், கீழே 6 ஆம் பந்தியில் விபரித்தவாறு சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது தரவாரிமுறையின் பேரிலான உயர்தர தரப் பரீட்சையில் பெற்ற தரங்களின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர்.

**6. தரவாரித்திட்டம்.**—சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் பெறப்பட்ட தரங்களின் பொருட்டு ஒதுக்கப்படும் புள்ளிகள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| டீ | — | விசேட சித்தி .. .. | 75 புள்ளிகள் |
| சீ | — | திறமைச் சித்தி .. .. | 50 புள்ளிகள் |
| எஸ் | — | சாதாரண சித்தி .. .. | 40 புள்ளிகள் |

ஆறுக்கு மேற்பட்ட பாடங்களில் தோன்றிச் சித்தியடைந்தவர்கள் ஆறு பாடங்களுக்கு மாத்திரம் தோன்றிச் சித்தி அடைந்தவர்கள் பெறும் மொத்தப் புள்ளிகளிலும் பார்க்கக் கூடுதலாகப் பெறும் மொத்தப் புள்ளிகளைத் தவிர்த்தற் பொருட்டுப் பரிசீலனை செய்யப்படவேண்டிய பாடங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் ஆறு பாடங்கள் என வரையறுக்கப்படும்.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒருவர் மேலதிகமாக 30 புள்ளிகள் பெற உரித்துடையவராவர். எனினும், க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்தவர்களுக்கு அல்லது திறமைச் சித்திகள், விசேட சித்திகள் முதலியன போன்று இப்பாடங்களிற் பெறப்பட்ட தரத்தின் பொருட்டுப் புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. இளஞ்கலைஞர் பட்டம் அல்லது எதாவது உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் கொடுக்கப்படும். இது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மேலதிகமாக 30 புள்ளிகளையும் உள்ளடக்கும்.* இங்கு குறிப்பிடப்படாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது ஏதேனும் கல்வித் தகைமையின் பொருட்டு மேலதிக புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட தரவாரியான திட்டத்திற்கு இணங்க விண்ணப்பப் படிவத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூடுகளில் பரீட்சார்த்திகள் தாமாகவே புள்ளிகளைத் தரப்படுத்தவேண்டும்.

**7. நேர்முகப்பரீட்சை.**—மேற்போந்த தரவாரித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் குறித்தொதுக்கிய புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட்டதும் பின்னர் பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படவேண்டிய திகதியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கீழேயுள்ள 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும். கிராமசேவகர் சேவைக்கான பரீட்சார்த்தியின் தகுதியை மதிப்பிடுவதுடன் கிராமத்திற்குத் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாக அவரது அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் வினவப்படுவதுமே இந்நேர்முகப் பரீட்சையின் நோக்கமாகும்.

**8. சேவை நிபந்தனைகள்.**—(i) அரசாங்க வர்த்தமானி பகுதி I, பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையனவுமாகும். விதவைகள் அநாதையர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு உதவுதொகைகள் செலுத்தப்படவேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலும் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளிலும் நிர்வாகப் பிரமாணங்களிலும் ஒரு வினாப் பத்திரமும் நிதி விதிகளில் இன்னொரு வினாப்பத்திரமும் கல்விச் சட்டத்தின் இன்னொரு வினாப் பத்திரமுமாக மூன்று வினாப் பத்திரங்களைக் கொண்டதாக மேற்குறித்த பரீட்சை அமையும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், இரண்டாவது திறமைக் கடப்புப்படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந்தர உத்தியோகத்தர் ஆகியோருக்கான தேசிய மொழிகளில ன பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தகைமைபெற வேண்டும். இரண்டாவது திறமைக் கடப்புப்படி சம்பள மட்டத்தைத் தாண்டியவர்கள் மூன்றுவது திறமைக் கடப்புப்படி சம்பள மட்டத்துக்கு மேல் செல்லுமுன் மேற்குறித்த தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) உத்தியோகத்தர் ஒருவரை மேலும் சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனக் கருதப்படின் தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் சேவையிலிருந்து அவர் விலக்கப்படலாம்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. **விண்ணப்பதாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும்:—

(அ) 1970.12.6 ஆந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கும் இவ் வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(ஆ) (i) **பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்**—அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விவசாயப் பட்டமேனும் விவசாயப் பட்டத்துக்குச் சமமென; அங்கீகரிக்கப்படும், யாதேனும் தகைமையேனும் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) **பட்டதாரிகள் அல்லாதவரைப் பொறுத்தவரையில்**—I ம் வகுப்பு பயிற்றப்பட்ட (சிங்கள/தமிழ்/ஆங்கில) தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் குறைந்தபட்சம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். அல்லது I ம் வகுப்பு ஆசிரியர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றபின் குறைந்தபட்சம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். மேலும், பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையால் விவசாயத்தில் வழங்கப்படும் தராதரப் பத்திரம் (II ம் வகுப்பு விரும்பற்பாலது) பெற்றிருக்க வேண்டும்.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையில் அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது சிங்கள/தமிழ் இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராகவும் தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ii) பெற்றுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(iii) சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை).

(iv) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது இதனை நிரூபிக்கும் வேறு யாதேனும் சான்று.

அரசினர் சேவையில் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதிலிருந்து மட்டுமே தவிர்வு அளிக்கப்படுகின்றனர்.

6. இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பங்களேனும் வேறுயாதெனும் கடிதங்களேனும் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அனுப்பப்பட வேண்டுமேயொழிய அமைச்சில் கடமை புரியும் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்குமல்ல.

7. அரசினர் செய்திமடலில் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகிறது.

8. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். அரசினர், வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உரிய பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ் ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம
நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

இல. பொ. நி/25/8,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆடு நவம்பர் மீ 3 ந் உ.

11-296—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

## இலங்கைப் போக்குவரத்துச் சபை பொறியியற் பகுதியில் II ஆம் வகுப்புத் தொழிலாளர் பதவிகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொறியியற் பகுதியில் பின்வரும் பதவிகட்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப் படுகின்றன.

**மின்சாரத் தொழிலாளர்**

**தகைமைகள்**

**வயது.**—26.11.1970 ஆம் தேதியன்று 23 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

**கல்வி.**—ஆகக் குறைந்தது 5 ஆம் தரத்தில் சித்தியெய்தியவராக இருக்கவேண்டும்.

**பயிற்சியும் அனுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையமொன்றில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு தொழிற் பயிற்சியிருப்பதுடன், பயிற்சியின் பின்பு பின்வருவனவற்றை அமைத்தல், பேணல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு அனுபவமுமிருத்தல் வேண்டும் :— ஒற்றைப்படி, மும்மடி மோட்டார்கள், தொடக்கிகள், கட்டுப்பாட்டுக் கியர்கள், சுற்றுத் தடுப்புக்கள், காற்று அமுக்கிகள், வலுக் கருவிகள். அத்துடன், " இன்சுலேசன் ", நிலப் பரிசோதனை (" எர்த் டெஸ்ற்றிங் ") லண்டனிலுள்ள மின்சாரப் பொறியியலாளர் நிலையப் பிரமாணங்கள் ஆகியவற்றிலும் அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.

**மோட்டார்/ஆமேச்சர் வைன்டேர்ஸ்**

**தகைமைகள்**

**வயது.**—26.11.1970 ஆம் தேதியன்று 23 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

**கல்வி.**—ஆகக் குறைந்தது 5 ம் தரத்தில் சித்தியெய்தியவராகவிருக்க வேண்டும்.

**பயிற்சியும் அனுபவமும்.**—அங்கீகரிக்கப்பட்ட வேலைக்களமொன்றில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு தொழிற்பயிற்சி இருப்பதுடன், பயிற்சியின் பின்பு, எல்லா வகையான ஏ. சி. மோட்டார்கள், ஆமேச்சர்கள், பிறப்பாக்கிகள், மாற்றிகள் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்.

அத்துடன், எல்லா வகையான மின்சாரக் கருவிகள், மோட்டார் தொடக்கிகள், கட்டுப்பாட்டுக் கியர்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்.**—மாதாந்தம் (எல்லாப் படிகளும் உட்பட)

ரூபா 220—5 × 4, 10 × 9—ரூபா 330/-

நேர்முகப் பரீட்சை, தொழிற் பரீட்சை ஆகியவற்றிற்குப் பின்பே பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவர்.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச ஆளணி முகாமையாளருக்கு 1970 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளடக்கிய கடித வுறையின்மீது கீழ் " பீபிஎவ் " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பதில் ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

### மாதிரிப் படிவம்

**இ. போ. ச. பொறியியல் பகுதியில் II ஆம் வகுப்பு தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பிக்கும் பதவி : ————.
2. முழுப் பெயர் : ————.
3. முகவரி : ————.
4. பிறந்த தேதி : ————.
   26.11.70 இல் வயது : ——— வருடம் : ————.மாதம் : ———
   (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படவேண்டும்).
5. கல்வித் தகைமைகள் : ————.
   (சித்தியடைந்த ஆகக்கூடிய தரமும் மொழியும் தரப்படவேண்டும்).
6. பயிற்சியும் அனுபவமும் : ————.
   (அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தின் பெயரும் பயிற்சிக் காலமும் அனுபவமும் தரப்பட வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).
7. அரசிறை மாவட்டம் : ————.
8. தேர்தற்றெகுதி : ————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப் படுத்துகிறேன். இதற்கு ஆதாரமாக சாதனங்கள் சமர்ப்பிக்க முடியும். இதன்கண் தரப்பட்டுள்ள விவரங்கள் யாதேனும் பொய்யானவையாகவோ அல்லது சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதி யற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப் பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் அறிவேன்.

————————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி : ————.

11—361—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

## கல்வி அமைச்சு

### அரசினர் பாடசாலைகளிலுள்ள வரைதல் ஆசிரியர் பதவிகள்

அரசினர் பாடசாலைகளில் உள்ள வரைதல் ஆசிரியர் பதவிகளுக்கு இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (பாடசாலைகள் கிளைக்கு) பதிவுத் தபால் மூலம் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப் படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " வரைதல் ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் " எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—

அனுமானச் சம்பள அளவுத்திட்டம் (i) ரூபா 768—2 × 30—5 × 36—12 × 42—1,512 வருடாந்தம்.

திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—ரூபா 2,640—19 × 60—3,780.

அனுமானச் சம்பள அளவுத்திட்டம் (ii) ரூபா 1,560—14 × 72—2,568 ரூபா 2,640 க்கு முன் வினைத்திறமைகாண் தடை—5 × 120—ரூபா 3,240 வருடாந்தம்.

திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—ரூபா 3,720—16 × 90—5 × 144—5,880.

வினைத்திறமைகாண் தகுதியைப் பெறுவதற்கு விண்ணப்பதாரர் வரைதலிலும் ஓவியத்திலும் அரசினர் நுண்கலைக் கல்லூரியால் வழங்கப் படும் இரண்டு வருட உயர்தர தராதரப் பத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது இரண்டு வருட உயர்தர தராதரப் பத்திரத்துக்குச் சமமானதும் நுண்கலைக் கல்லூரியால் நடாத்தப்படுவதுமான விசேட பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்டவேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். அரசினர் பாடசாலைகளில் கடமைபுரியும் நிரந்தர ஆசிரியர்களுக்கும் அரசினர் சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ஆ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(இ) இத்தீவின் எப்பகுதியிலும் சேவை புரிதற்கு ஆயத்தமாய் இருப்பதுடன் அதற்கான உடல் நலனும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஈ) (i) 1949 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதத்திற்கு முன் வழங்கப்பட்ட வரைதல் ஆசிரியர் சிங்கள/தமிழ் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். இத்தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்க்கான அனுமானச் சம்பள விகிதம் பின்வருமாறு :—

ரூபா 768—2 × 30, 5 × 36, 12 × 42—1,512 வருடாந்தம் அல்லது

(ii) 1949 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்ட வரைதல் ஆசிரியர் சிங்கள/தமிழ் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(iii) வரைதல் ஆசிரியர் ஆங்கில தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(iv) வரைதலிலும் ஓவியத்திலும் அரசினர் நுண்கலைக் கல்லூரியால் வழங்கப்படும் 3 வருட சாதாரண தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(v) வரைதலிலும் ஓவியத்திலும் அரசினர் நுண்கலைக் கல்லூரியால் வழங்கப்படும் 2 வருட உயர்தர (சனிக்கிழமை வகுப்புகளின் பின்னரான) தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(vi) அரசினர் நுண்கலைக் கல்லூரியால் வரைதல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சாதாரண தராதரப் பத்திரம் ; அல்லது

(vii) சாந்தி நிகேத்தன் விஷ்வ பாரதி கலா பவனத்தால் கலைகளிலும் பணிகளிலும் நாலு வருட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(மேற்போந்த (ii) தொடக்கம் (vii) வரையுள்ள உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரப் பத்திரங்களை பெற்றுள்ளவர்க்கான அனுமானச் சம்பள விகிதம் பின்வருமாறு :—ரூபா 1,560—14 × 72—2,568 ; ரூபா 2,640 பெறமுன் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் தேறவேண்டும் ; 5 × 120—3,240 வருடாந்தம்).

4. **சேவை நிபந்தனைகள்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) உபகாரச் சம்பள நோக்கங்களின் பொருட்டு விதவைகள் அநாதை கள் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு ஆண் நியமதாரிகள் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

5. **நியமன நியதிகள்.**—(அ) அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் நியமதாரி அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின், அரசகரும மொழிச் சட்டத்தின் தேவைகளைப் பொறுத்தளவில் பின்வரும் நிபந்தனைகள் அவருக்கு அமையும்.

(i) தகுதிகாண் காலம், 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை, செயற்படுத்தற்பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் காலத்துக்குக் காலம் ஆக்கப்படக் கூடியனவான விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண் காலத்தில் சிங்கள மொழியில் வேண்டிய தேர்ச்சியைப் பெறவேண்டும்.

(iv) தகுதிகாண் கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுதல் ஏனையவற்றுடன், சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும்.

விதிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் இத்தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தி எய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணங்கள் இடை நிறுத்தம் செய்யப்படும் ; விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமான 6 மாத காலத்துக்குள் உரிய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட உயர்ச்சிப்பணம் நிறுத்திவைக்கப்படும் ; அப்பரீட்சையில் சித்தியெய்தும்வரை அவ் வுயர்ச்சிப்பணம் தொடர்ந்து நிறுத்திவைக்கப்படும்.

(v) தகுதிகாண் காலம் முடிவடையுமுன் சிங்களத்தில் விதிக்கப்பட்ட தேர்ச்சித் தரத்தை அடையத் தவறுமிடத்து நியமதாரி மீது 120 ஆம், 121 ஆம் இலக்க நிர்வாகப் பிரமாணங்களின் ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். (மேலுள்ள (iii), (iv), (v) ஆம் உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தமிழ், ஆங்கில மொழிகள் மூலம் சேர்க்கப்படும் நியமதாரிகளுக்கு அமையும்).

(vi) பதவியில் உறுதிப்படுத்தப்படும் திகதியிலிருந்து 2 வருட காலத் துக்குள் அவர் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துக்குச் சமனான ஒரு வினைத்திறமைகாண் பரீட்சையில் சிங்கள மொழியில் தேறவேண்டும். இப்பரீட்சையில் தேறத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்படும்.

(ஆ) தகுதிகாண் காலம் முடியமுன்—

(i) சிங்கள மொழிமூலம் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் சிங்களத்தில் சித்தியடைய வேண் டும்.

(ii) தமிழ் மொழிமூலம் சேர்க்கப்படும் அபேட்சகர்கள் க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் தமிழில் சித்தியடைய வேண்டும்.

(இ) இந்நியமனம் அரசினர் சேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், வியவகாரச் சங்கிரகமுறை விதிகள், இத்திணைக்களத்தால் விடுக்கப்படும் கட்டளைகள் அல்லது பிரமாணங்கள், காலத்துக்குக் காலம் அரசாங்கம் விடுக்கும் கட்டளைகள் அல்லது பிரமாணங்கள் ஆகியவற்றிற்கு அமையும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவன வற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு. :** ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்கப்பட மாட்டாது).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவரது தகைமை ஆகியவற்றைக் குறிப்பிடும் இரு சமீப கால நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றுள் ஒன்று விண்ணப்பதாரி வதியும் பகுதிக் கிராம சேவகரால் வழங்கப்பட்டு உரிய பிரிவுக் காரியாதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

7. இவ்வரசாங்க வர்த்தமானியில் I ம் பகுதியின் II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையிலுள்ள நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளைத் கவனிக்குமாறு விண்ணப்ப தாரிகள் கேட்கப்படுகின்றனர்.

8. விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. அஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு தமது விண்ணப்பங்களை நேரகாலத்துடன் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளரும்
மகா வித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ௵ நவம்பர் ௴ 2 ந் ௳.

## மாதிரிப் படிவம்

**அரசினர் பாடசாலைகளுக்கு வரைதல் ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்**

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.

2. தபால் விலாசம் : ————.

3. விவாகம் செய்தவரா செய்யாதவரா : ————. (வாழ்க்கைத் துணைவர் அரசினர் ஊழியராயின் அவர் பற்றிய விபரம்).

4. பால் : ————.

5. ஆசிரியராயின் பதிவிலக்கம் : ————.

6. விண்ணப்பதாரியின் பிறந்த திகதியும் இடமும் : ————. (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைத்தனுப்பப்பட வேண்டும்).

7. 12.12.70 அன்றுள்ளபடி வயது : ————.

8. பின்வருவோர் பிறந்த இடம் : ————.

(அ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.

(ஆ) விண்ணப்பதாரியின் தாய் : ————.

9. (அ) சாதியம் : ————.

(ஆ) இலங்கையராயின், வம்சாவழி/பதிவு காரணமாகவா ? :————

10. (i) தற்போதைய உத்தியோகம் (சேவை விபரத்துடன்) : ————

(ii) விண்ணப்பதாரி முன்னர் அரசினர் சேவையில் அல்லது ஸ்தல ஆட்சிச் சபைச் சேவையில் இருந்திருப்பின் அத்தகைய சேவைக் காலமும் அச்சேவையிலிருந்து விலகியதற்கான காரணமும் : ————.

11. தகைமைகள் :

(i) கல்வித் தகைமைகளும் வரைதலில் பெற்றுள்ள தகைமை களும் :————.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆம் பந்தியின் எவ்வுப பிரிவின் பிரகாரம் விண்ணப்பித்தற்கு உரித்துடையனீர் ? : ————.

(தராதரப் பத்திரத்தின் ஒரு பிரதியை இணைக்கவும்).

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும், நான் எனது பதவியில் இருந்து விலகினவனுகக் கருதப்படவில்லையென்றும், அரசினர் சேவையில் இருந்து விலக்கப்படவோ அல்லது நீக்கப்படவோ இல்லை யென்றும், வம்சாவழியாக/பதிவு காரணமாக நான் ஓர் இலங்கையர் என்றும் இத்தால் உறுதி அளிக்கின்றேன். மேலே கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவை என இப்பதவிக்கான தெரிவு செய்யப்படமுன் காணப்படின் தகுதியற்ற வராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப்பின் காணப்படின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**11–297—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932.**

எனது இல. ரீஆர்./6/168

## நிருவாகக் கல்விக் கழகம்

### முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

**முகவுரை**

1 : 1 நிருவாகக் கல்விக் கழகம் 1971 ஆம் ஆண்டின் தனது முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பயிற்சி நெறிகளை அறிவிக்கின்றது. முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 10 கிழமைகளுக்கு நடக்கும் முகாமை அபிவிருத்திப் பயிற்சி நெறியைக் கொண்டுள்ளது ; இத்துடன் ஒவ்வொன்றும் 100 முதல் 125 மணித்தியாலங்கள் வரையான வகுப்பறை வேலையோடு கூடிய சிறப்பு விருப்புரிமைப் பயிற்சி நெறிகள் நடாத்தப்படலாம்.

1 : 2 தனிப்பட்ட பாடத் தொடர்களாகவன்றி முழுமையான ஒரு நிகழ்ச்சி ஒழுங்காகவுள்ள முகாமை அபிவிருத்திப் பயிற்சி நெறி பின்வரும் கல்வித்துறைகளை உள்ளடக்கியிருக்கும் :

(1) பொருளாதார, சமூகக் கொள்கை.

(2) முகாமைப் பொருளாதாரம்.

(3) முகாமையும் அமைப்பும்.

(4) அபிவிருத்தி நிருவாக அமைப்பும் முறைகளும்.

1 : 3 விருப்புரிமைப் பயிற்சி நெறிகள் பின்வருமாறு :

(1) அரசாங்க ஆளணி முகாமை.

(2) கைத்தொழில் தொடர்புகள்.

(3) செயற்பாட்டு ஆராய்ச்சி.

(4) திட்டம் உருவாக்கல், மதிப்பிடல், முகாமை.

(5) சமூக, சமுதாய அபிவிருத்தி முகாமை.

(6) உற்பத்தி, வழங்கல் முகாமை.

(7) அரசாங்க நிதி.

(8) கமத்தொழில் பொருளாதாரம்.

(9) போக்குவரத்துப் பொருளாதாரம்.

(10) விநியோக, சந்தைப்படுத்தல் பொருளாதாரம்.

(11) சர்வதேசப் பொருளாதாரம்.

(12) அபிவிருத்திப் பொருளாதாரம் (இலங்கையை விசேடமாகக் குறிப்பிடும்).

(13) கல்வி நிருவாகம்.

(14) சுகாதார நிருவாகம்.

(15) பொலிசு நிருவாகம்.

(16) உள்ளூர் ஆட்சி.

(17) சர்வதேசத் தொடர்புகள்.

முகாமை அபிவிருத்திப் பயிற்சி நெறி முடிவடைந்தவுடன் சிறப்பு விருப்புரிமைப் பயிற்சி நெறியொன்றைத் தெரிந்தெடுக்குமாறு எதிர்பார்க்கப்படுவர்.

**2. தகவுத் திறனும் விண்ணப்பிக்கும் முறையும்**

2 : 1 விண்ணப்பிப்போர் அரசாங்க சேவையிலோ அரசாங்கத்துறைக் கூட்டுத்தாபனத்திலோ ஒரு முகாமைப் பதவியில் ஐந்தாண்டுச் சேவை செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பிப்போர் 1971 திசம்பர் மாதம் 31 ஆந் தேதியில் 45 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

2 : 2 மாதிரி விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்க்கூடாக அனுப்பப்படல்வேண்டும் ; அன்னார், விண்ணப்பக்காரர் பயிற்சி நெறிக்கு முழு நேரமும் செல்வதற்கு விடுவிக்கப்படுவார் எனச் சான்றளித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதி அல்லது அதற்கு முன் நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளருக்குச் சேரவேண்டும்.

3. **தேர்வு :** நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளரின் தற்றுணிபின் பேரில் தேர்வு செய்யப்படும். குறிப்பிட்ட ஒரு காலத்தில், குறிப்பிட்ட ஒரு பயிற்சி நெறிக்கு ஒருவர் தேர்வு செய்யப்படுவர் என உத்தரவாதமளிக்க முடியாது. எப்பயிற்சி நெறிக்கும் பங்குபற்றுவோர் ஒருவரைத் தெரிவு செய்கையில் பற்பல சேவைகள், துறைகள், அனுபவம் ஆகியன சமமாகக் கலந்திருக்கின்றனவோ வென்பதும் விசேடமாகக் கவனிக்கப்படும்.

**4. அரசாங்க முகாமையில் டிப்புளோமா**

4 : 1 1971, திசம்பர் மாதம் தொடக்கம், நிருவாகக் கல்விக் கழகம் அரசாங்க முகாமை டிப்புளோமா அளிப்பதற்கு ஆண்டுதோறும் பரீட்சை நடாத்தும்.

பகுதி I—பின்வரும் பாடங்களில் ஒரு தாள் :

(1) பொருளாதார, சமூகக் கொள்கை.

(2) முகாமைப் பொருளாதாரம்.

(3) முகாமையும் அமைப்பும்.

(4) அபிவிருத்தி நிருவாக அமைப்பும் முறைகளும்.

பகுதி II—பின்வரும் பாடங்கள் எவற்றிலும் இரு தாள்கள் :

(1) அரசாங்க ஆளணி முகாமை.

(2) கைத்தொழில் தொடர்புகள்.

(3) செயற்பாட்டு ஆராய்ச்சி.

(4) திட்ட உருவாக்கல், மதிப்பிடல், முகாமை.

(5) சமூக, சமுதாய அபிவிருத்தி முகாமை.

(6) உற்பத்தி, வழங்கல் முகாமை.

(7) அரசாங்க நிதி.

(8) கமத்தொழில் பொருளாதாரம்.

(9) போக்குவரத்துப் பொருளாதாரம்.

(10) விநியோக, சந்தைப்படுத்தல் பொருளாதாரம்

(11) இலங்கையை விசேடமாகக் குறிப்பிட்டுச் சர்வதேசப் பொருளாதாரம்

(12) அபிவிருத்திப் பொருளாதாரம்.

(13) கல்வி நிருவாகம்.

(14) சுகாதார நிருவாகம்.

(15) பொலிசு நிருவாகம்.

(16) உள்ளூர் ஆட்சி.

(17) சர்வதேசத் தொடர்புகள்

4 : 2 அரசாங்க முகாமையில் டிப்புளோமா அளிக்கப்படுவதற்குப் பரீட்சார்த்திகள் 6 தாள்களுள் ஒவ்வொன்றிலும் 45 சத வீத சித்தி நிலையையடையும்படி எதிர்பார்க்கப்படுவர். பரீட்சார்த்திகள் டிப்புளோமாவின் II ஆம் பகுதிக்குச் செல்ல முன்னர் I ஆம் பகுதியில் முதலில் தகைமை பெறல் வேண்டும். I, II ஆம் பகுதிகளில் சித்தியடைந்து டிப்புளோமா பெற்ற ஒரு பரீட்சார்த்தி II ஆம் பகுதியிலுள்ள வேறொரு விருப்புரிமைப் பாடமெடுக்கலாம் ; இதற்கும் அவருக்கொரு சான்றிதழ் அளிக்கப்படும். எக்காரணம் பற்றியும் எப்பகுதிக்கும் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது.

4 : 3 டிப்புளோமா பட்டத்துக்குப் பின்னுள்ள தரத்தையுடையது. இப்பாடங்கள் ஒவ்வொன்றினதும் விரிவான பாடவிதானங்களை நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளருக்கு விண்ணப்பஞ் செய்து பெற்றுக் கொள்ளலாம். நிருவாகக் கல்விக் கழகம் நடாத்தும் பயிற்சி நெறிகளில் பங்கு பற்றுவதுடன், டிப்புளோமா பரீட்சைக்குத் தோன்ற முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் தாமாகத் தீவிரமாகப் படித்தல் வேண்டும்.

4 : 4 ஒரு பரீட்சார்த்தி முகாமை பற்றிய தற்காலக் கருவிகளையும் நுட்பங்களையும் கிரகித்தல், பிரச்சினைகள் ஏற்படுங்கால் இவற்றைப் பயன்படுத்தித் தீர்மானங்கள் செய்யும் வல்லமை, அத்துடன், அவர் தெரிந்தெடுக்கும் சிறப்பியலான அரசாங்க முகாமைத்துறை பற்றிய அவரின் விரிவான அறிவு ஆகியவற்றைச் சோதிப்பதற்கேதுவாக இப் பரீட்சை அமைந்திருக்கும்.

4 : 5 ஒவ்வோராண்டும் ஒகத்து மாதத்தில் டிப்புளோமாப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வரவழைக்கப்படும்.

5. **பயிற்சி நெறித் தேதிகள்.**—1971 ஆம் ஆண்டு முகாமை அபிவிருத்திப் பயிற்சி நெறிகள் பின்வருமாறு நடாத்தப்படும் :

(1) 5.1.71—17.3.71. (2) 18. 4.71—29. 6.71

(3) 16.7.71—25.9.71 (4) 4.10.71—15.12.71

சிறப்பு விருப்புரிமைப் பயிற்சி நெறிகள் நடாத்தப்படும் தேதிகள் ஒவ்வொருவருக்கும் புறம்பாக அறிவிக்கப்படும்.

எச். எஸ். வனசிங்க,
பணிப்பாளர்,
நிருவாகக் கல்விக் கழகம்.

நிருவாகக் கல்விக் கழகம்,
28/10, லோங்கடன் இடம்,
கொழும்பு 7.

## நிருவாகக் கல்விக் கழகம்

### முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்—1971

### பகுதி I

1. முழுப் பெயர் : —————.
(குடும்பப் பெயரின் கீழ்க் கீறிடுக)

2. சேவையுந் தரமும் : —————.

3. வயது : ————. பிறந்த தேதி : ————.

4. திணைக்களம் : ————.

5. பதவிப் பெயர் : ————.

6. கல்விச் சாதனைகள் : ————.
(பட்டம், டிப்புளோமா ஆகியனவும், பட்டத்துக்கு அல்லது டிப்புளோமாவுக்குப் பெற்ற சான்றிதழ்களும் விடயப் பாடங்களும்).

7. பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், வேலைக்களங்கள் ஆகியனவும் பிற உயர் தொழில் பயிற்சி முறைகளும் : ————.

8. இப்பயிற்சி நெறிக்குச் செல்லவிரும்புங் காலத்தைக் கூறுக—

| | |
|---|---|
| 5.1.71—17.3.71 | 16. 7.71—25. 9.71 |
| 18.4.71—29.6.71 | 4.10.71—18.12.71 |

9. முகவரியும் தொலைபேசி இலக்கமும் : ————.

........................................................ஆகிய நான்,
(முழுப் பெயர்)

இங்கு சமர்ப்பித்துள்ள கூற்றுக்கள் யாவும் எனது நம்பிக்கைக் கெட்டிய அளவில் உண்மையானவையும் சரியானவையுமெனச் சான்றளிக்கின்றேன்.

நான் பயிற்சி பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால், நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் விதிக்கும், அத்தகைய தகவல்களை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய நிபந்தனைகட்கமைவாக நடத்தற்கும் உடன்படுகின்றேன்.

————
கையொப்பம்.

தேதி : ————.

### பகுதி II

திரு. ..............................................அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் முழுச் சம்பளத்தில் இப்பயிற்சி நெறிக்கு விடுவிக்கப்படுவர் ; இக்காலத்தில் அவருக்கு எவ்வகையான கடமைகளோ பணிகளோ கொடுக்கப்படமாட்டா.

————
பெயர் குறிப்பிடும் அதிகாரியின்
ஒப்பமும் பதவிப் பெயரும்.

11-298—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

புத்தளம் மாவட்டத்தில் உள்ள கிராம சேவகர் சேவைப் பிரிவிலுள்ள வெற்றிடங்களுக்கு கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. வெற்றிடங்கள் :**

ஒவ்வொரு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவிலும் நிரப்பப்படவேண்டிய மதிப்பிடப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வென்னப்புவ | .. | 8 |
| நாத்தாண்டிய | .. | 5 |
| சிலாபம் | .. | 2 |
| புத்தளம் | .. | 1 |
| கல்பிட்டிய | .. | 5 |
| குமார வன்னி பலாத்த | .. | 4 |

**3. சம்பளம் :**

கீழேயுள்ள 8 (iii) (ஜி) பந்தியில் விதிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தைப் பூர்த்தியாக்கியபின்னர் கிராமசேவகர் சேவைக்கு நியமிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் ஆண்டொன்றிற்கு 3,000 ரூபா சம்பள வீதம் ஆண்டு தோறும் 90 ரூபாச் சம்பள உயர்வுகளுடன் 5,160 ரூபாவாக உயரும் திரட்டிய சம்பளத்தில் நியமிக்கப்படுவர். இந்த அளவுத்திட்டத்தில் 3,810 ரூபாவிற்கு முன்னர் விலைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஒன்று நடைபெறும்.

**4. தகைமை :**

(1) பரீட்சார்த்திகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.*

* அரசாங்கசேவைக்கு ஆட்சேர்க்கும் எல்லா நோக்கங்களின் பொருட்டு " இலங்கையர் " என்னும் சொல் வம்சாவழியாக அல்லது பதிவுவழியாக இலங்கைப்பிரசையாக இருப்பவர் எனப் பொருள்படும்.

(3) பரீட்சார்த்திகள் ஒரு கிராமசேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல்நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் (அ) இலங்கைச் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது நாலு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதமும் அல்லது வர்த்தக கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறுபாடங்களில் குறைந்தது நான்கிலாகிலும் திறமைச் சித்தி பெற்றுவர்களாக இருத்தல் வேண்டும், அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்ந்த தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் 1970.12.10 ஆந் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வயதிற்குக் கூடியவர்களாகவோ இருத்தலாகாது. அரசாங்கசேவையில் நிரந்தர நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(6) பரீட்சார்த்திகள் (அ) விண்ணப்பங்களுக்கான முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
இது கிராமசேவகரிடமிருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
அல்லது

(ஆ) அவர்கள் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். இது அவர்களின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தப்படல் வேண்டும், அல்லது

(இ) அவர்கள் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் தொடர்ந்து குறைத்தது ஐந்து ஆண்டுகளுக்குக் கல்வி கற்றவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் கல்விகற்ற பாடசாலையின் அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்களின்மூலம் நிரூபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அரசாங்கத்தில் அல்லது கூட்டுத் தாபனங்களில் மாற்றத்துக்குரிய சேவையில் உள்ள பெற்றோர்களையுடைய பரீட்சார்த்திகள், பெற்றோர் ஒருவரின் பிறந்த இடத்தைத் தமது நிரந்தர வதிவிடமாகத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**5. தெரிவு செய்யும் முறை :**

நியமனத்திற்கான பரிட்சார்த்திகள், கீழே 7 ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் காட்டிய செயல் திறனுடன், கீழே 6 ஆம் பந்தியில் விபரித்தவாறு சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது தரவாரி முறையின் மேலான உயர்தரப் பரீட்சையில் பெற்ற தரங்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

6. **தரவாரித்திட்டம்.**—சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் ஆறுபாடங்களில் பெறப்பட்ட தரங்களின் பொருட்டு ஒதுக்கப்படும் புள்ளிகள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| டீ-விசேடசித்தி | .. | .. | 75 புள்ளிகள் |
| சீ-திறமைச்சித்தி .. | .. | .. | 50 புள்ளிகள் |
| எஸ்-சாதாரண சித்தி | .. | .. | 40 புள்ளிகள் |

ஆறுக்கு மேற்பட்ட பாடங்களில் தோன்றிச் சித்தியடைந்தவர்கள் ஆறு பாடங்களுக்கு மாத்திரம் தோன்றிச் சித்தி அடைந்தவர்கள் பெறும் மொத்தப் புள்ளிகளிலும் பார்க்கக் கூடுதலாகப் பெறும் மொத்தப் புள்ளிகளைத் தவிர்த்தற்பொருட்டுப் பரிசீலனை செய்யப்படவேண்டிய பாடங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் ஆறுபாடங்கள் என வரையறுக்கப்படும்.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒருவர் மேலதிகமான 30 புள்ளிகள் பெற உரித்துடையவராவர். எனினும், க. பொ. த. (உயரதரம்) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்தவர்களுக்கு அல்லது திறமைச் சித்திகள் விசேட சித்திகள் முதலியனபோன்று இப்பாடங்களிற் பெறப்பட்ட தரத்தின் பொருட்டுப் புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. இளம் கலைஞர் பட்டம் அல்லது எதாவது உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் கொடுக்கப்படும். இது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மேலதிகமாக 30 புள்ளிகளையும் உள்ளடக்கும். இளங்கலைஞர்கள் பட்டத்தை உடைய பரீட்சார்த்திகளுக்கு க. பொ. த. (உயர்தரம்) விற்காக மேலதிக புள்ளிகள் ஒதுக்கப்பட மாட்டாது. இங்கு குறிப்பிடப்படாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது ஏதேனும் கல்வித் தகைமையின் பொருட்டு மேலதிக புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட தரவாரியான திட்டத்திற்கு இணங்க விண்ணப்பப் படிவத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூடுகளில் பரீட்சார்த்திகள் தாமாகவே புள்ளிகளைத் தரப்படுத்த வேண்டும்.

7. **நேர்முகப்பரீட்சை.**—மேற்போந்த தரவாரித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் குறித்தொதுக்கிய புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட்டதும் பின்னர் பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படவேண்டிய திகதியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையைத் கொண்ட பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கீழேயுள்ள 10(iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும் கிராமசேவகர் சேவைக்கான பரீட்சார்த்தியின் தகுதியை மதிப்பிடுவதுடன் கிராமத்திற்குத் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாக அவரது அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் வினவப்படுவதுமே இந்நேர்முகப் பரீட்சையின் நோக்கமாகும்.

8. **சேவை நிபந்தனைகள்.**—அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையனவுமாகும். விதவைகள் அநாதையர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு உதவுதொகைகள் செலுத்தப்படவேண்டும்.

(iii) அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அரசாங்க சேவைக்குப் புதியவராக இருப்பின்—

(அ) அவருடைய தகுதிகாண் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தினதும், அரசாங்க அரசகரும மொழிக் கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கும் அமைய இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்கு உட்படுதல் வேண்டும்.

(இ) தகுதிகாண் காலத்தில் அரசகரும மொழியில்–சிங்களத்தில்–தொழில் ஆற்றும் அறிவை அவர் பெறல் வேண்டும்.

(ஈ) தகுதிகாண் கால முடிவில் அவரது வேலையை உறுதிப்படுத்தல் பிறவற்றுக்கிடையில் அவர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரச் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளை முறையே நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்கிடையில் (அல்லது பொருத்தமான போது 1 ஆம் 2 ஆம் தரங்களை முறையே ஒரு வருடத்திலும், இரண்டுவருடத்திலும்) அவர் சித்தியெய்துவதிலேயே தங்கி உள்ளது.

விதிக்கப்பட்ட காலத்திற்குள் இத் தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறின், ஆண்டேற்றங்கள் இடைநிறுத்தப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திற்கு மேலும் ஆறு மாத காலத்திற்குள் சோதனையில் சித்தியடையாவிட்டால் இடைநிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும் : அப்படியான நிறுத்தம் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் தேர்ச்சிபெறும்வரை அல்லது கீழே பந்தி (iii) (உ) இல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட காலம்வரை நடைமுறையில் இருக்கும்.

(உ) தகுதிகாண் கால முடிவில் சிங்களத் தேர்ச்சியில் குறிப்பிட்ட தரத்தைப் பெறுவிடின் 120 ஆம், 121 ஆம் நிருவாகப் பிரமாணங்கள் பொருத்தமுடையனவாகும்.

மேலே (இ), (ஈ), (உ) இல் உள்ள நிபந்தனைகள் சிங்கள மொழி மூலம் சேவையிற் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தா.

(ஊ) கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நிருவாக மாவட்டத்தின் எக்கிராம சேவகர் பிரிவுக்கும் இடமாற்றத்திற்குள்ளாவர்.

(எ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் யாவரும் அவர்களின் நியமனத்தின் பின் செய்யவேண்டிய கடமைகளில் பயிற்சி பெறல் வேண்டும். தகுதிகாண் கிராமசேவகர்களின் நியமனங்கள், பரீட்சார்த்தி திருப்திகரமாகத் தனது பயிற்சியை பூர்த்தி செய்துள்ளார் என்றும், தற்காலிக கிராம சேவகர்களாக நியமனஞ் செய்யப்படுவதற்கும் சகல முறைகளிலும் தகுதி உடையவர் என்றும் குறிப்பிட்டு நிருவாக மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பேரிலேயே செய்யப்படும்.

ஆரம்பத் தெரிவின்போது இப்பரீட்சார்த்தியின் பயிற்சிக்காலம் மூன்று மாதங்களுக்கு மேற்படாது என்பதுடன், எல்லாப் படிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 50 ரூபா என்ற விகிதத்தில் பயிற்சி பெறுவோருக்கும் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்தில் பரீட்சார்த்திகள் விடுமுறைச் சலுகைக்கு உரித்துடையராகார்.

(ஏ) பயிற்சிக்குப் பின் கிராமசேவகர் ஒருவர் கிராமசேவகராக மூன்றாண்டுச் சேவையைப் பூர்த்தியாக்கும்வரை அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது. மேலும், அவர் உறுதிப்படுத்தப்படவேண்டுமென அரசாங்க அதிபர் திருப்தி அடையும் வரையும் அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது.

9. **விண்ணப்பங்கள்**

(i) இக்கச்சேரியிலிருந்து அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் அலுவலகம் எதிலிருந்தும் விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளலாம். மேற்போந்த 4 (iv) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தகுதிப் பரீட்சையை எம்மொழியில் சித்தியடைந்தார்களோ அம்மொழியில் அல்லது தமது விருப்பத்தின்பேரில் சிங்கள மொழியில் தம் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சார்த்திகள் நிரப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவத்தைப் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் திருத்தஞ்செய்வதற்குத் தடுக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள், அரசாங்க அதிபர் கச்சேரி, புத்தளம் என்னும் முகவரிக்கு 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையத்தக்கதாகப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்கசேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை நேரடியாக அரசாங்க அதிபருக்குக் குறிப்பிட்ட திகதியில் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பிரதியொன்று விண்ணப்பதாரரின் திணைக்களத் தலைவருக்கூடாகவும் அனுப்பப்படல் வேண்டும்.

(iii) குறிப்பிட்ட தேதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அல்லது கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

10. தகைமைச்சாதனங்கள்

(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப் படலாகாது. கோரப்பட்டவாறான படிவத்தில் தேவையான விபரங்கள் தரப்படுதல்வேண்டும். இவ்வகையில் நிறைவாக இல்லாத ஒரு விண்ணப்பம், அதன் சொந்தத் திறமைகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுவதோடு, நிராகரிக்கவும் படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தகைமையடைந்த பரீட்சார்த்திகளிடமிருந்து தகவுத்திறனை நிரூபிப்பதற்கு சாதனச சான்று காட்டுமாறு கேட்கபடுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டால்; சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமானவையாகும் :—

(அ) நற்பண்புச் சான்றிதழ்,

**குறிப்பு.**—பரீட்சார்த்தி ஒருவர் அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையில் இருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையில் இருந்து அண்மையில் விலகி இருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்சான்றிதழைப் பெறுதல் வேண்டும் : அவ்வாறில்லாதவிடத்து அதைச் சமாதான நீதவான், வழக்குரைஞர் (அப்புக்காத்து) வழக்கறிஞர் (பிரக்கராசியார்) அல்லது நொத்தாரிசு, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது ஆண்டுக்குத் திரட்டிய சம்பளமாக 4,800/- ரூபா அல்லது அதற்கு மேற் பெறும் ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளக்கூடியவருமான யாரேனுமொருவர் ஆகியவர்களில் எவராவது ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். சான்றிதழ் வழங்குபவரின் பெயர் பதவிப் பெயர், முகவரி ஆகியவை தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஏற்கெனவே அரசாங்கசேவையிலுள்ள பரீட்சார்த்திகள் நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார். ஆனால், அவர்கள் தமது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமானவையென்றும், நியமிக்கப்படுவதற்குத் தெரிவுசெய்யப் பட்டால் அவர்களைச் சேவை ஒப்புக்கொள்ளவிடமுடியுமென்றும் கூறுமொரு சான்றிதழைத் தமது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட வயதுச் சான்றிதழ், உத்தேச வயதுச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க மட்டுமே முடிந்த எப்பரீட்சார்த்தியினதும் பிறந்த திகதி, அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த ஆண்டின் யூலை 1 ஆம் திகதியாகக் கருதப்படும்.

**குறிப்பு.**— (i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேடப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) சத்தியக் கடுதாசிகளோ ஞானஸ்நானச் சான்றிதழ்களோ பிறப்புச்சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/ பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் பரீட்சார்த்தி விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/பெயர்களிலிருந்து வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, விடயத்திற்கேற்றவாறு (110 ஆம் அத்தியாயமாம்) பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 394 ஆம் இலக்கத்திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தமது பெயர்களை மாற்றியுள்ளவர்களுமான பரீட்சார்த்திகள் திருத்தப்பட்ட பிறப்புப் பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவுசெய்யப்பட்டதற்குரிய பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவழியினர் என்னும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான உத்தியோக பூர்வமான மூலக்கடிதம் (ஏற்புடையவிடத்து) ;

(ஈ) கல்வித்தகைமை பற்றிய மூலச் சான்றிதழ், அல்லது சான்றிதழ் வழங்கப்படாதவிடத்து, பிற உத்தியோகபூர்வமான சாதனங்கள் எடுத்துக்காட்டாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட இலங்கை க. பொ. .த (சாதாரணதரம்) பரீட்சைப் பெறுபேற்று நறுக்கு அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற மூலக்கடிதம்.

(உ) மேலே 4 (iv) இன் கீழ் உள்ள தகைமையினை நிரூபிக்கும் சான்றிதழ்கள் (iv) விண்ணப்பம் செய்யும்போதே தேவையான சாதனங்கள் யாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு மதியுரை கூறப்படுகின்றது. நேர்முகப் பரீட்சையின்போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாதிருக்கும் அல்லது அவற்றைச் சமர்ப்பிக்கத் தாமதிக்கும் பரீட்சார்த்தியினது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11. பொய்யான விபரங்கள் கொடுப்பதற்குரிய தண்டனை

இவ்வறிவிப்பில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவராகக் காணப்பட்டால் தெரிவு செய்தற்கு முன்போ தெரிவு செய்தபின்போ எந்நிலையிலாவது அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாகும்.

பரீட்சார்த்தியொருவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எவையேனும் அவரறிந்தவரையில் பொய்யெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைததிருந்தால் அல்லது அவரின் சேவைக்காலத்தில் எப்பொழுதாவது அவர் விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென்று நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையில் இருந்து உடனே நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

இவ்வறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகாதோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மருத்துவப் பரிசோதனை

நியமனத்தின்பொருட்டுத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கேற்ற உடற்றகுதி அவர்களுக்கு உண்டென்பதைக் காட்டுவதற்கு மருத்துவப் பரிசோதனையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் தவறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

13. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயமும் அரசாங்க அதிபரின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

பீ. ஜீ. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி,
புத்தளம்,
1970.10.31.

11—389—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/29/37/2 (ஜி)

## தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றுவதற்கான பரீட்சை—1969 திசெம்பர் மாதம்

1969.10.24 ஆந் தேதிய இல. 14,877 ஐக் கொண்ட இலங்கை அரசாங்கச் செய்திமடலில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை தொடர்பான 1969.10.11 ஆந் தேதிய இல. 1/23/33/2 (ஜி) ஐக் கொண்ட அறிவித்தலின் 7 ஆம் பந்தியின் கீழுள்ள பரீட்சைத்திட்டம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப் பட்டுள்ளது :—

**பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்குப் பாடங்களும் அவற்றுக்குள்ள புள்ளி களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துத்தாள்கள் யாவற்றிலும் கூடாத கையெழுத்திற்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக் கப்படும். தெளிவற்ற கையெழுத்துள்ள பரீட்சார்த்திகள் தகைமை நீக் கம் பெறுவதற்கும் ஆளாவார்.

(அ) சிங்கள மொழிமூலம் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு :

புள்ளி

(1) பொருத்தமான அலுவலகக் குறிப்புக்களுடன் உத்தியோக முறையான கோப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட உத்தியோக முறையான விடயங்கள் தொடர்பாய் ஒரு கடிதத்தை, அல்லது அறிக்கையை எழுதுதல் (ஒரு மணி நேரம்) .. .. .. 50

(2) தட்டெழுத்து—20 நிமிடங்களுக்கு நிமிடத்துக்கு 25 சொல்வீத ஆகக் குறைந்த கதியில் .. 150

தகைமை பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் (1) இல் 40% (2) இல் 50% பெறல் வேண்டும்.

(ஆ) தமிழ் மொழிமூலம் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு :

(1) பொருத்தமான அலுவலகக் குறிப்புக்களுடன் உத்தியோக முறையான கோப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அடிப்படையாக் கொண்ட உத்தியோக முறையான விடயங்கள் தொடர்பாய் ஒரு கடிதத்தை அல்லது அறிக்கையை எழுதுதல் (ஒரு மணித்தியா-லம்) .. .. .. 50

(2) தட்டெழுத்து — 20 நிமிடங்களுக்கு நிமிடத்திற்கு 25 சொல்வீத ஆகக்குறைந்த கதியில் .. .. 150

தகைமை பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் (1) இல் 40% (2) இல் 50% பெறல் வேண்டும்.

(இ) ஆங்கில மொழி மூலம் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு :

(1) பொருத்தமான அலுவலகக் குறிப்புக்களுடன் உத்தியோகமுறையான கோப்பிலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட உத்தியோகமுறையான விடயங்கள் தொடர்பாய், கடிதம் அல்லது அறிக்கையொன்றினை எழுதுதல் (ஒரு மணித்தியாலம்) .. .. .. 50

(2) தட்டெழுத்து — 20 நிமிடங்களுக்கு நிமிடத்துக்கு 40 சொல்வீத ஆகக் குறைந்த கதியில் .. 150

தகைமை பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் (1) இல் 40% (2) 50% பெறல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) 1 ஆம் பாடத்திற்கு (அதாவது பொருத்தமான அலுவலகக் குறிப்புக்களுடன் உத்தியோகமுறையான கோப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட உத்தியோக முறையான விடயங்கள் தொடர்பாய் ஒரு கடிதத்தை அல்லது அறிக்கையை எழுதுதல்) [ஒரு மணித்தியாலம்] ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் மிகக்குறைந்தது 40% ஐப் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே தட்டெழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இத் தட்டெழுத்துப் பரீட்சையானது மேலே அ. ஆ. இ. என்பனவற்றின் கீழே 2 ஆம் பாடமாகக் காட்டப்பட்டுள்ளது ;

(ii) தமிழ், ஆங்கிலமொழி மூலம் சேர்க்கப்பட்ட பொதுத்தரத் தட்டெழுத்தாளர்கள், இப்பரீட்சையில் அவ்வாறு விரும்பினால், எழுத்துப் பரீட்சையை அரசகரும மொழியிலும் (சிங்களத்தில்) தட்டெழுத்துப் பரீட்சையை சந்தர்ப்பத்திற்கேற்பத் தமிழிலும், அல்லது ஆங்கிலத்திலும் செய்யலாம்.

**பரீட்சைத் தேதி.**—தட்டெழுத்துப் பரீட்சை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆந் தேதியன்று கொழும்பில் நடாத்தப்படுமென இப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் யாவரினதும் தகவலுக்காக அறிவிக் கப்படுகின்றது.

எச். எஸ். வனசிங்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 1 ந் வெ.

11–350—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

இல. 1/23/2/20 (ஜி)

## பொது எழுதுநர் சேவையின் நிறைவேற்று எழுதுநர் வகுப்பின் II ந் தரத்திற்குப் பதவியுயர்த்துவதற்காய பரீட்சை—1970 நவம்பர் மாதம்

1970.8.28 ஆந் தேதிய 14,921 ஆம் இலக்க இலங்கை அரசாங்கச் செய்திமடலின் பகுதி I, பிரிவு II இல் வெளியிடப்பட்ட, 1970 ஆம் ஆண்டு மாதம் 17 ஆந் தேதிய அறிவித்தலின் நியதிகளின் பிரகாரம் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆந் தேதியன்று நடாத்தப்படவிருந்த மேற்படி பரீட்சை 1970 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ஆந் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாகப் பரீட்சார்த்திகளின் தகவலுக்காக அறிவிக் கப்படுகிறது.

2. இப் பரீட்சை பற்றிய பிற நிபந்தனைகள் மாற்றமின்றியிருக்கும்.

எச். எஸ். வனசிங்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு—7.
1970, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதி,

11–349—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## கல்வி அமைச்சு

### ஆரம்பக் கல்விப் பாடவிதான அபிவிருத்திக் குழுவிற் பங்குபற்றுவோர்

கல்வி அமைச்சிற் பாடவிதான அபிவிருத்தி வேலையிற் பங்குபற்றிக் கொள்வதற்கு அரசினர் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களிடமும் ஆசிரியர் கலாசாலைகளிலுள்ள விரிவுரையாளர்களிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் பிரகாரம் பாடவிதான அபிவிருத் திக்குப் பின்வரும் பாடத்துறைகள் சம்பந்தமாகவே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன ;

(அ) சிங்கள மொழி/தமிழ் மொழி

(ஆ) ஆங்கில மொழி

(இ) வரலாறு, புவியியல், குடியியல் } சமூகக் கல்வி

(ஈ) பொது விஞ்ஞானம்

(உ) கணிதம்

2. கீழ்க்காணும் மாதிரிப்படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப் பட்டு, பிரதிமகாவித்தியாதிபதி, ஆரம்பக்கல்விக் கிளை, கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் " பாடவிதான அபிவிருத்தி ஆரம்பக் கல்வி " எனக் குறிக்கப்பட வேண்டும்.

3. குறித்த ஒரு பாடத்துறைப் பாடவிதான அபிவிருத்திக்குழு தேவைக்கேற்பப் பயிற்றப்பட்ட பட்டதாரிகள், பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோரைக்கொண்டு அமைக்கப்படும். எனவே இவ் வேலையிற் பங்குபற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட விரும்புவோர் கீழ்க்காணும் பொது நிபந்தனைகளையும் விசேட நிபந்தனைகளையும் திருப்தி செய்தல் வேண்டும்.

(i) **பொது நிபந்தனைகள்.**—(அ) பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியர்களாய் அல்லது பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாய் அல்லது I ஆம் II ஆந்தர சிறப்புப்பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாய் இருத்தல் வேண்டும்.

(ஆ) தகைமை பெற்ற ஆசிரியராய்க் குறைந்த பட்சம் 3 வருட சேவை பூர்த்திருத்தல் வேண்டும்.

(ii) **குறித்த பாடத்துறைகளுக்கான விசேட தகைமைகள்**

**பாடத்துறை—அ**

## சிங்கள மொழி/தமிழ் மொழி

(அ) பட்டப்பரீட்சைக்குச் சிங்கள மொழியை அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பயிற்றப்பட்ட பட்டதாரியாய் அல்லது சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் I ஆம் அல்லது II ஆந் தர சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரியாய் இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியராய் இருத்தல் வேண்டும். இதனுடன் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி கற்பிப்பதிற் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :—முதல் (தாய்) மொழியைக் கற்பிப்பதிற் பல்கலைக் கழகக் கல்விப்பிரிவில் அல்லது ஆசிரியர் பயிற்சி ஸ்தாபனம் ஒன்றில் விசேட பயிற்சி பெற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

**பாடத்துறை—ஆ**

## ஆங்கில மொழி

(i) பட்டப்பரீட்சைக்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக்கொண்ட பயிற்றப்பட்ட பட்டதாரியாய் அல்லது ஆங்கில மொழியில் I ஆம் அல்லது II ஆந்தர சிறப்புப்பட்டம் பெற்றவராய் ஆங்கில மொழி கற்பிப்பதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியராய் I ஆந்தரத்திலிருந்து 8 ஆந்தரம் வரையுள்ள வகுப்புக்களில் ஆங்கில மொழி கற்பிப்பதிற் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :—இலங்கையில் விசேடமாக ஆங்கில மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதிற் பல்கலைக்கழகக் கல்விப்பிரிவில் அல்லது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையொன்றில் விசேட பயிற்சி பெற்றவர்கட்கு முதன்மை அளிக்கப்படும்.

## வரலாறு, புவியியல், குடியியல் (சமூகக்கல்வி)

வரலாறு, புவியியல், குடியியல் (சமூகக்கல்வி)

(அ) பட்டப் பரீட்சைக்கு வரலாற்றை/புவியியலை/ஆட்சியியலை/பொருளியலை ஒரு பாடமாகக் கொண்ட பயிற்றப்பட்ட பட்டதாரியாய் அல்லது வரலாற்றில்/புவியியலில்/ஆட்சியியலில்/பொருளியலிற் சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரியாயிருத்தல் வேண்டும்.

அல்லது

பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியராய் இருத்தல் வேண்டும். இதனுடன் வரலாற்றை/புவியியலை/குடியியலைக் கற்பித்துக் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :—பட்டம் பெற்றபின் பல்கலைக்கழகப் பிரிவில் அல்லது ஆசிரியர் பயிற்சி ஸ்தாபனம் ஒன்றில் சரித்திரம்/புவியியல்/சமூகக்கல்வியை ஒரு விருப்புப் பாடமாகக் கொண்டு விசேட பயிற்சி பெற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

**பாடத்துறை—ஈ**

## பொது விஞ்ஞானம்

பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியராயும் பொது விஞ்ஞான பாடத்தைக் கற்பித்து 3 வருட அனுபவமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :—விடுமுறைக் கால வகுப்புக்களிற் பொது விஞ்ஞான பாடத்தைக் கற்பிற்கும் ஆசிரியர்க்கு வழிகாட்டாசிரியராய் கடமையாற்றியவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

**பாடத்துறை—உ**

**கணிதம்**

(i) பட்டப்பரீட்சைக்கு கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரியாய்

அல்லது

(ii) கணிதம் கற்பிப்பதிற் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட I ஆந்தர ஆசிரியராய் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :—பின்வரும் மேலதிகக் தகைமைகளைப் பெற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும். பாடத்துறை விடயங்களைத் திட்டமிட்டு வெளியிடுவதில் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

புதிய கணித பாடத்திட்டத்தைப் பற்றிய விடுமுறைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றியவராய் இருத்தல் வேண்டும்.

புதிய கணித பாடத்திட்டத்தைக் கற்பிப்பதில் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

4. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(அ) இவ்வேலையிற் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்படுபவர்கள், தமது நிரந்தர பதவிகளுக்குரிய சம்பளங்களைப் பெறுவதுடன் அதே இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளையும் பேணிக்கொள்வர். பாடவிதான அபிவிருத்திக் குழுவில் அவர்கள் செய்யும் சேவை, பாடசாலை, ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணங்கள் 2 (1F) ஆம் பிரிவுக்கமையப் பதிவு செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படும்.

(ஆ) அவர்களின் வேலையின் தன்மைக்கியையச் சாதாரண அலுவலக நேரங்களிற் கடமை புரிய வேண்டும். பாடசாலைகளிலுள்ள வழக்கம் போல, போயா தினங்களுக்கு முன்தினம். விடுதலைத்தினமாகக் கருதப்படும்.

(இ) பாடசாலை விடுமுறை காலத்தில் எல்லா நாட்களிலேனும் சில நாட்களிலேனும் கடமைபுரியும்படி இவர்கள் கேட்கப்படலாம். அங்ஙனமாயின் அங்ஙனம் வேலை செய்த பாடசாலை விடுமுறை நாட்களுக்குப் பதிலாக அவர்கள் ஓய்வு எடுக்கலாம். பாடவிதான அபிவிருத்திக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் இச்சலுகை காரியப்படும், வகையில் இதற்கான விண்ணப்பஞ் செய்யப்பட வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்களுடைய நிரந்தர பதவிக்கமையும் லீவு நிபந்தனைகளே இந்நியமனத்துக்கும் அமையும்.

5. **பொது.**—(அ) (பங்கு பற்றுவோர் முதற்றடவையாக ஆறு மாதந் தொடக்கம் ஒரு வருடத்துக்கான நியமனங்களுக்குத் தெரிவுசெய்யப்படுவர். இத்தகைய தெரிவு பகுதி நேர அல்லது முழுநேர வேலையாக அமையலாம். இக்குழுவில் நடைபெறும் வேலையின் தன்மை காரணமாகப் பங்குபற்றுவோர் ஒவ்வொருவரும் ஒரு குழுவின் உறுப்பினராக வேலைசெய்தல் வேண்டும். அவர்களுக்கு ஒதுக்கப்படும் வேலை முடிவில், இவ்வேலை அவர்களுக்குக் கொடுக்கப்படுமுன் அவர்கள் வகித்த பதவிகளைத் திரும்பவும் அவர்களுக்குவழங்குவதற்குச் சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

(ஆ) முழுநேர வேலைக்குத் தெரிவு செய்யப்படுவோர் அவர்களின் வேலை முடிவடையும் வரை கொழும்பில் அல்லது வேறேதேனும் நிலையத்தில் வைத்திருக்கப்படுவார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் மாற்றுக் கட்டளை வழங்கப்படும்.

(இ) பாடசாலைகளிற் கல்வி அபிவிருத்திக்கு இங்ஙனம் பங்குபற்றுவோருக்குக் கொடுக்கப்படும் வேலை மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றுதலால், பங்குபற்றுவோர் ஒவ்வொருவரும் தமது கடமையை எவ்வளவு தகுதியுடன் நிறைவேற்றுகிறார்களென மிக நுணுக்கமாக அவதானிக்கப்பட்டு, அவர்களுக்கு ஒதுக்கப்படும் வேலையை நிறைவேற்றியதும் அவர்களின் தகுதியைக் குறிக்கும் ஓர் அத்தாட்சிப் பத்திரம் மகா வித்தியாதிபதியின் கையொப்பத்துடன் வழங்கப்படும்.

6. அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பெறுதற்கு இல்லை. மேற்காணும் மாதிரிப்படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பாடசாலைத் தலைவர், விண்ணப்பதாரி சேவை புரியும் பிரதேச வித்தியாதிபதி ஆகியோர் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். ஆலோசிக்கப்படும் வகையான வேலைக்கு ஆசிரியரின் தகுதி, மன இசைவு ஆகியவற்றைப் பற்றி மேலே குறிப்பிடப்பட்ட இருவரும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம்.

7. விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. எனவே பாடசாலைத் தலைவராலும் பிரதேசக் கந்தோராலும் விண்ணப்பங்கள் தாமதமடையக்கூடுமாதலால் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நேர காலத்துடன் அனுப்புதல் வேண்டும்.

பீ. உடகம,
மகா வித்தியாதிபதி.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 2 ந் வ.

பிரதி மகா வித்தியாதிபதி (ஆரம்பக்கல்விக் கிளை),
கல்வி அமைச்சு,
கொழும்பு,

மாதிரிப் படிவம்

**ஆரம்பக் கல்வி பாடவிதான அபிவிருத்தி வேலையில் பங்குபற்றிக் கொள்ளுவதற்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
2. (i) பாடசாலை விலாசம் : ————.
(ii) விலாசம் ஓய்வு காலத்தில் : ————.
(இது சம்பந்தமான சகல கடிதங்களும் இவ்விலாசத்துக்கே அனுப்பிவைக்கப்படும்.)
3. பால் : ————.
விவாகம் செய்தவரா செய்யாதவரா ? ————;—
5. பிறந்த தேதி : ————.
6. சாதியம் : ————.
7. தற்போதைய பதவி : ————
ஆசிரியராகப் பதிவிலக்கம் : ————.
யாதேனும் தரப்பதவி வகிப்பவராயின் அத்தரத்துக்கு நியமிக்கப்பட்ட தேதி : ————.
8. சேவை விபரம் : —
பாடசாலை : ————. தொடக்கம் : ————. வரை : ————.
9. கல்வித் தகைமைகள் : —
(அ) (i) பட்டம் : ———— *சிறப்பு/பொது.
(ii) பட்டப் பரீட்சைக்கான பாடங்கள் : ————
(iii) *வகுப்பு/பிரிவு : ————
(iv) வருடம் : ————.
(v) பல்கலைக் கழகம் : ————.
(ஆ) கலை விஞ்ஞான 1 ஆம் பரீட்சை இடைமானிப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் : ————.
(இ) பட்டம் பெற்றபின் பெற்ற யாதேனும் விசேட பட்டம் (எடுத்த பாடங்கள், படித்த பல்கலைக் கழகம் பற்றிய விபரங்களுடன்) : ————.
10. பெற்ற தகைமைகள் : —
(அ) தராதரப் பத்திரம் : ————.
(ஆ) படித்த காலம் : ————.
(இ) ஸ்தாபனம் : ————.
(ஈ) தகைமை பெற்ற பாடங்கள் : ————.
(உ) சித்தித்தரம் (இருப்பின்) : ————.
11. பட்டம் பெற்றபின் வேறு யாதேனும் தகைமைகள் இருப்பின் : ————.
12. விண்ணப்பதாரி பங்குபற்ற விரும்பும் பாடத்துறை : ————.
13. ஒவ்வொரு பாடத்துறையிலும் பெற்றுள்ள விசேடத் தகைமைகள் : ————.

ஒவ்வொரு தொடர்பிலும் விபரமாகக் கொடுபட வேண்டும் :
(அ)
(ஆ)
(இ)
(ஈ)
(உ)
(ஊ)
(எ)
(ஏ)
(ஐ)

14. படிப்பித்தல் வேலை பற்றிய விபரங்கள் : —

| வருடம் | பாடம்/பாடங்கள் | தரம் அல்லது வகுப்பு | வாராந்த மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1970 | ...... | ............ | ............ | 
| 1969 | ...... | ............ | ............ |

15. விண்ணப்பதாரி படித்த பாடங்கள் அல்லது படிப்பிக்கும் பாடங்கள் சம்பந்தமான யாதேனும் பிரசுரங்களை அவர் வெளியிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்கள் : ————.
16. தெரிவு செய்யப்படுதற்கான தகுதியை நிரூபித்தற்கு விசேட சான்றுகளை ஆதாரமாகக் கூறலாம் : ————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

‡ அதிபர் சிபார்சு

————,
அதிபர்.

திகதி : ————.

............ வித்தியாலயம்.

† பிரதேச வித்தியாதிபதியின் சிபார்சு

........................
பிரதேச வித்தியாதிபதி.

திகதி : ...................... பிரதேசம்

‡ விளம்பரத்தின் ஆறும் பந்தியைப் பார்க்கவும். விண்ணப்பதாரிகளுள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் 14 ஆம் பிரிவின் கீழ்க் கேட்கப்படும் தகவல் உட்பட இங்கு கொடுபடும் தகவல் யாவற்றுக்கும் ஆதாரமான தராதரப்பத்திரங்கள் சாதனங்கள் அல்லது வேறேதேனும் அத்தாட்சிப் பத்திரங்கள் யாவற்றையும் நேர்முகப் பாட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கல்வி அமைச்சில் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 1970 நவம்பர் 27 ந் திகதி.

11—338—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

**பாவனைக்குதவாத 17 மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல்**

மருதானையிலுள்ள அஞ்சற்றந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பண்டகசாலையில், தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பிரிவில் இருக்கும் பாவனைக்குதவாத 17 மோட்டார் வாகனங்கள் விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள அஞ்சற்றந்திக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 1, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம் 5 வது மாடி, பிரதான தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பொறியலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களில், இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். மருதானை, அஞ்சற்றந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பண்டகசாலையிலுள்ள போக்குவரத்து உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு இப்பாவனைக்குதவாத மோட்டார் வாகனங்களைப் பார்வையிடலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்தி அலுவலக தந்திக் காசாளரிடம் அல்லது எந்த அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபரிடம் கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினை பிரதான தந்தித் தொலைபேசிப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப் பத்திர சாதனங்கள் 1970ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 திகதி ந. ப. 12 மணிவரை வழங்கப்படும்.

வி. எம். அபேசேகர,
அஞ்சல் அதிபர்நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

நிர்வாகப் பிரிவு,
அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகம்,
லோட்டஸ் வீதி, கோட்டை 503,
கொழும்பு 1.

11—265—12.11.70—ந். திகதிய வர்த்தமானி இல. 14,932

## சமூக சேவைப் பகுதி

### புடவை வாங்குவதற்குக் கேள்விப்பத்திரங்கள்

கொழும்பு 3 ச் சேர்ந்த பாலதக்ஷ மாவத்தையிலுள்ள சமூக சேவைப் பகுதியின் அதிகாரி, 1970 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30ஆந் திகதி முற்பகல் 10 மணிவரை கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆவலியில் விவரிக்கப்பட்டுள்ள புடவை வகைகளைக் கொள்வனவு செய்வதற்குக் கேள்விகளை ஏற்றுக்கொள்வார். சமூக சேவைப் பகுதி வளவிலுள்ள "செத்சல" விற்பனைச்சாலையிலிருந்து கொள்வனவு செய்யப்படும் புடைவைகளைக் கொண்டு செல்லலாம்.

2. 1970.11.25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் மாதிரிப்பத்திரத்தில் கேள்விகளை அனுப்பலாம். இந்தக் காரியாலயத்திலாவது கச்சேரியிலாவது பிணைப்பணம் ரூபா 50 கட்டிப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே இம்மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விகள் இணைப்பிரதிகளில் எழுதப்பட்டு கடித உறையுள் இடப்பட்டு அரக்கு மெழுகில் பொறியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுகை மூலையில் "புடவை வாங்குவதற்குக் கேள்விகள்" என்ற சொற்றொடர்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

4. கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

5. அனுப்பப்படும் கேள்வியில், புடவை வகை ஒவ்வொன்றினையும் ஒவ்வொன்றின் விகிதத்தையும் விவரிப்பதுடன் ஒவ்வொருவகையிலும் மொத்தம் எவ்வளவு தொகை தேவை என்பதையும் விவரித்தல் வேண்டும்.

6. கேள்வியாளர்கள், கேள்விகள் மூடப்பட்ட திகதியிலிருந்து 4 வாரங்கட்குத் தங்கள் கேள்வி விகிதங்களைத் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

7. (அ) கேள்வியை ஏற்ற திகதியிலிருந்து, 7 நாட்களுக்குள், சித்திபெற்ற கேள்வியாளர், ரொக்கத்தில் பொருட்களின் பெறுமதியைக் கொடுத்துப் பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும் ;

(ஆ) இவ்விதஞ் செய்யத் தவறுதல் பிணைப்பணத்தை இழக்கச் செய்யும். தவறிய ஒப்பந்தக்காரர் ஆவலியில் பெயர் இடம் பெறும்.

8. சித்திபெற்ற கேள்வியாளர்களின் பிணைப்பணங்கள் 7 ஆம் பந்தியில் காட்டப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிக் கேள்வியாளர்கள் மனுச் செய்ததும் திருப்பிக் கொடுக்கப்படும். சித்திபெறாத கேள்வியாளர்கள் மனுச்செய்து பிணைப்பணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

9. 1970 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குக் கேள்விகள் சமூக சேவைப் பகுதியின் பிரதி அதிகாரியால் திறக்கப்படும். திறக்கப்படும் பொழுது, கேள்வியாளர்கள் நேரில் வந்து பார்க்கலாம்.

10. காரியாலய நேரங்களில் செத்சல விற்பனைச்சாலையில் மாதிரிப் புடவைகளைப் பார்வையிடலாம்.

11. ஆவலியில் குறிக்கப்பட்ட புடவைகளை, சீதுவை குருடர், செவிடர் வேலைத் தலத்தில் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

12. தனித்தனி புடவை வகையை ஆதாரமாகக் கொண்டே கேள்விகள் மதிப்பிடப்படும். 5,000 கொண்ட சிப்பங்களில் புடவைகள் விற்பனை செய்யப்படும்.

13. கேள்விகளை ரத்துச் செய்யவோ ஏற்கவோ கேள்வியில் ஒரு பகுதியை ரத்துச் செய்யவோ ஏற்கவோ சமூகசேவை அதிகாரிக்கு உரிமை உண்டு.

14. ஏனைய விபரங்களை சீதுவை குருடர், செவிடர் வேலைத்தலத்தில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

#### புடவை ஆவலி

| விபரம் | நூல் விபரம் | | பெற்றுக் கொள்ளத் தக்க தொகை |
|---|---|---|---|
| ஹனிக்கூம் துவாய்கள் | 24″ × 45″—2/20 வெளுத்த | .. | 31,000 |
| துண்டுகள் .. | 18″ × 18″—2/20 வெளுத்த | .. | 1,51,000 |
| துடைதுண்டுகள் (கபில) | 24″ × 24″—2/20 கபில | .. | 1,09,000 |
| பீங்கான் துண்டுகள் .. | 24″ × 32″—2/20 கபில | .. | 6,000 |
| குசினித் துண்டுகள் (கபில) .. | 24″ × 24″—2/20 கபில | .. | 16,000 |
| பின்னிய துண்டுகள் .. | 12″ × 12″—பின்னல் நூல் | .. | 5,000 |

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூகசேவை அதிகாரி.

1970 ம் ஆடு ஒற்ரோபர் மீ 31 ந் உ.

11–341—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## சௌக்கிய பகுதி—மலேரியாத் தடுப்பு இயக்கம்

### உபயோகிக்க முடியாத மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்

நாராஹேன்பிட்டி மலேரியாத் தடுப்பு இயக்க செயலகத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதற்காக 1970 ம் ஆண்டு கார்த்திகை மீ 26 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிவரை மலேரியாத்தடுப்பு இயக்க அத்தியட்சரால் "சீல்" மெழுகிட்டு அடைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பதிவு இலக்கம் | | வகை | | ஆகக்குறைந்தவிலை குறிப்பிடுதல் ரூபா | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ச. |
| சி வி | 2354 .. | சி. பி. சி. வில்லீஸ் ஜீப் | .. | 7,200 | 0 |
| ஈ என் | 2321 .. | சி. ஜே. 5 வில்லீஸ் ஜீப் | .. | 4,000 | 0 |
| ஈ என் | 2324 .. | ஷை | .. | 4,000 | 0 |
| ஈ என் | 2325 .. | ஷை .. | .. | 4,000 | 0 |
| ஈ என் | 2326 .. | ஷை .. | .. | 4,000 | 0 |
| ஈ என் | 2329 .. | சி. ஜே. 5 வில்லீஸ் ஜீப் | .. | 4,000 | 0 |
| 2 சிறி | 2996 .. | சி. ஜே. 6 வில்லீஸ் ஜீப் | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3001 .. | ஷை .. | .. | 11,000 | 0 |
| 2 சிறி | 3005 .. | ஷை .. | .. | 9,000 | 0 |
| 2 சிறி | 3007 .. | ஷை .. | .. | 10,000 | 0 |
| 2 சிறி | 3009 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3011 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3013 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3014 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3019 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3078 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3079 .. | ஷை .. | .. | 10,000 | 0 |
| 2 சிறி | 3081 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 2 சிறி | 3082 .. | ஷை .. | .. | 9,500 | 0 |
| 3 சிறி | 8328 .. | ஷை .. | .. | 13,750 | 0 |

மேற்குறிப்பிட்டுள்ள வாகனங்களை கொழும்பு 5, நாரஹென்பிட்டி, மலேரியாத் தடுப்பு இயக்க உதவிக் காரியதரிசியுடன் ஒழுங்கு செய்து செயலக நேரங்களில் பார்வையிடலாம்.

2. ஒரு கச்சேரியில் (கொழும்புக் கச்சேரி நீங்கலாக) அல்லது கொழும்பு யோக் வீதி இலங்கை வங்கியில் மலேரியாத்தடுப்பு (கணக்கு எண் 141) அத்தியட்சகரின் வரவுக்கணக்கில் ரூபா 100 ஐ கேள்விப்பத்திரவைப்புக் பணமாகச் செலுத்திப்பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதின் பேரில் 1970 ஆண்டு கார்த்திகை மீ 22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல 12.00 மணிவரை மலேரியாத் தடுப்பு இயக்க அத்தியட்சகரின் செயலகத்தில் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களின் இருபிரதிகளில் கேள்விகளை நிரப்பி அனுப்ப வேண்டும். ஒவ்வொரு வாகனங்களுக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களை அனுப்பும் தபாலுறையில் இடது புறமேல் மூலையில் "உபயோகிக்கமுடியாத மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடடு, அத்தியட்சர், மலேரியாத் தடுப்பு இயக்கம் நாரஹேன்பிட்டி, கொழும்பு 5, (தபாற் பெட்டி எண் 1472) என்று முகவரியிட்டு அனுப்பவேண்டும். கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபாலிலோ அல்லது இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ போடலாம்.

4. விண்ணப்பத்தில் கேள்விப் பத்திரகாரர்களினால் கேட்கப்பட்ட தொகை எழுத்திலும், இலக்கத்திலும் கொடுக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் சொற்கள், இலக்கங்கள் ஆகியவற்றில் தெளிவின்மை இருப்பின் அவை நிராகரிக்கப்படுவதற்கு உரித்துடையவையாகும். கேள்விப்பத்திரத்தில் மாற்றங்கள், நீக்கல் ஆகியன ஏற்படின் கேள்விப்பத்திரகாரரின் சுருக்கு ஒப்பம் அங்கு இடப்பட வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் மேலே 1 ம் பந்தியில் குறிப்பிட்டதிகதி அன்று உரிய நேரம் முடிந்தவுடன் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப் பத்திரகாரர்கள் அனைவரும் சமூகமாய் இருக்கலாம். கேள்விப்பத்திரகாரர்களின் பெயர்களும், கேள்விப்பத்திரத் தொகைகளும் அங்கு வாசிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரகாரர் அவரின் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டு அவருக்கு அறிவிக்கப்பட்டால், அவர் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 நாட்களுக்குள் (மூன்று) முழுப்பணத்தையும் செலுத்தி வாகனத்தை/வாகனங்களை எடுத்துச் செல்லத் தவறினால் எதுவித கோரிக்கைக்கும் இடமின்றி கேள்விப்பத்திரவைப்புப் பணம் பறிமுதலாக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் எவராகிலும் அவருக்கு அறிவித்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் (ஏழு) முழுப்பணத்தையும் செலுத்தத் தவறினால், அல்லது பின்வாங்கினால் வாகனம்/வாகனங்கள் இரண்டாவது கூடிய தொகையினுடையவருக்குக் கொடுக்கப்படும். அத்துடன் அவரின், பெயரை அரசாங்க ஏமாற்றுக்காரர் பட்டியலில் போடப்படும்.

7. கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும், அல்லது அவற்றில் எதனையும், ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மலேரியாத் தடுப்பு இயக்க அத்தியட்சகருக்கு உரிமையுண்டு.

எவ். ஏ. விக்கிரமசிங்க,
அத்தியட்சகர்,
மலேரியாத் தடுப்பு இயக்கம்.

அத்தியட்சகர் செயலகம்,
மலேரியாத் தடுப்பு இயக்கம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு கார்த்திகை மீ 1 ந் வ.

11—277—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## தேசீய வீடமைப்புத் திணைக்களம்

மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் தண்ணீர் வழங்கும் திட்டத்தின் திருத்தங்களுக்காக, 1970, டிசம்பர் 10 ம் தேதியன்று காலை 10 மணிவரை கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரப் படிவங்கள் 1970, நவம்பர் 30 ம் தேதியன்று நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

இத்திணைக்களத்து அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. ஏ. சி. பெர்னாண்டோ,
பதில் தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

11—376—12.11.170 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**—1971 ம் ஆண்டு ஜனவரி 1 ந் திகதி தொடக்கம் 1971 தெசம்பர் மாதம் 31 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்பு பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப் பணம்.**—ரூபா 100/– பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடியும் தினத்திற்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பண பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகருக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்துமேல் மூலையில் சேவையின் தன்மையும், இடது பக்க கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களிலுள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டுள்ள கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுப்படி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணைவைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்பட மாட்டாது.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக் காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **(i) கேள்விக்காரர்களுக்கு அறிவித்தல்.**—கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பட்டிற்கு 4½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்போதுள்ள 12 அவுன்ஸ் அளவிலிருந்து 9 அவுன்ஸ் அரிசி அளவாக திருத்தப்பட்டிருக் கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து தேவைப்பட மாட்டாது.

(iii) ஒரு இரு. 50 சத வீதம் இப்போதுள்ள விலையில் குறைக்கப்படாத வீதத்தில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியினல் அரிசி விநியோகிக்கப் படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ, இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர் களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசத்தின் படி ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களின் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினல் விநியோகிக்கப் படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறிவிடப்படும்.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு, 1970 ம் ௵ நொவம்பர் ௴ 3 ந் உ.

தா. சண்முகநாதன்,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணை**

| நிலையம் | கேள்வி வைப்புப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரம் | அண்ணளவான உணவுகளின் அளவுகள் — ஊழியர்களுக்கு: சுத்தமான மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | மரக்கறி | நோயாளிகளுக்கு: சுத்தமான மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | மரக்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிராம வைத்தியசாலை, எருவூர் .. | 100 .. | 600 | 10.12.70 மு.ப. 10 மணி | 220 .. | — | 430 .. | 880 .. | 1,180 .. | — | 2,200 . | 4,710 |
| கிராம வைத்தியசாலை, பொத்துவில் .. | 100 .. | 400 | | 330 .. | — .. | 640 .. | 1,300 .. | 650 .. | — | 1,290 .. | 2,650 |
| கிராம வைத்தியசாலை, அக்கரைப் பற்று .. | 100 .. | 600 | | 390 .. | — .. | 630 .. | 1,250 .. | 580 .. | — .. | 1,280 .. | 2,510 |
| கிராம வைத்தியசாலை, நிந்தவூர் | 100 .. | 300 | | 400 .. | — .. | 790 .. | 1,600 .. | 50 .. | — .. | 120 .. | 240 |
| கிராம வைத்தியசாலை, களுவாஞ் சிக்குடி .. | 100 .. | 300 | | 100 .. | — .. | 190 .. | 270 .. | 640 .. | — .. | 1,280 .. | 2,560 |
| கிராம வைத்தியசாலை, வாகரை | 100 .. | 500 | | 330 .. | — .. | 640 .. | 1,340 .. | 240 .. | — .. | 470 .. | 1,030 |
| பிரசவு விடுதி, லகுகலை .. | 100 .. | 300 | | 140 .. | — .. | 290 .. | 580 .. | 250 .. | — .. | 510 .. | 1,020 |
| பிரசவு விடுதி, நாவற்காடு .. | 100 .. | 300 | | 170 .. | — .. | 360 .. | 730 .. | 110 .. | — .. | 230 .. | 490 |
| திருக்கோவில் பிரசவ விடுதி .. | 100 .. | 300 | | 190 .. | — .. | 370 .. | 750 .. | 140 .. | — .. | 220 .. | 430 |
| பிரசவ விடுதி, அக்கரைப்பற்று | 100 .. | 300 | | 50 .. | — .. | 100 .. | 200 .. | 60 .. | — .. | 120 .. | 300 |

11–3 6—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## தேசிய பாற்சபை

**வெற்றுப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம்**

ராகம, வெலிசரையில் உள்ள தேசிய பாற்சபையின் மீள அடைக்கும் தொழிற்சாலையில் இருந்து கீழ்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்யவும் அகற்றவும், 1970 டிசம்பர் 3 ம் திகதி பிற்பகல் இரண்டு மணிவரை கீழே கையொப்பமிட்டவரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விவரணம்**

1. 56 இருத்தல் கொள்ளக்கூடிய 6 படைக் கடதாசி வெற்றுப் (பழுதாகியதும், பழுதாகாததுமான) பைகள்.
2. 56 இருத்தல் கொள்ளக்கூடிய 5 படைக் கடதாசி வெற்றுப் (பழுதாகியதும், பழுதாகாததுமான) பைகள்.
3. 50 இருத்தல் கொள்ளக்கூடிய 6 படைக் கடதாசி வெற்றுப் (பழுதாகியதும், பழுதாகாததுமான) பைகள்.
4. 50 இருத்தல் கொள்ளக்கூடிய 5 படைக் கடதாசி வெற்றுப் பைகள்.
5. 56 இருத்தல் கொள்ளக்கூடிய வெற்றுப் பொலிதீன் பைகள்.
6. 50 இருத்தல் கொள்ளக்கூடிய வெற்றுப் பொலிதீன் பைகள்.
7. பழுதாகிய 2½ இருத்தல் பால்மா வெற்றுத்தகரங்கள்.
8. பழுதாகிய 1 இருத்தல் பால்மா வெற்றுத் தகரங்கள்.
9. தரப்படுத்தப்பட்ட அளவுகளில் மரப்பெட்டிகள்.

$22\frac{1}{2}'' \times 15\frac{1}{4}'' \times 9\frac{1}{4}''$
$21\frac{1}{4}'' \times 15'' \times 11\frac{1}{2}''$
$21'' \times 15\frac{1}{2}'' \times 9\frac{1}{4}''$
$20\frac{3}{4}'' \times 13'' \times 12''$
$19\frac{1}{4}'' \times 15'' \times 13\frac{1}{4}''$
$18\frac{1}{4}'' \times 18\frac{1}{4}'' \times 13\frac{3}{4}''$
$18\frac{1}{4}'' \times 14\frac{1}{2} \times 9\frac{5}{8}''$
$18\frac{1}{8}'' \times 17\frac{7}{8}'' \times 13''$
$17\frac{3}{4}'' \times 12\frac{1}{2}'' \times 9\frac{3}{4}''$
$17'' \times 16'' \times 11''$

10. ஒரு அந்தருக்கான உருக்குப்பட்டிகள்.

இவற்றை ராகம (கொழும்பு—நீர்கொழும்புத் தெருவில் 8 ம் மைலில்) வெலிசரையில் உள்ள பால்மா மீளவடைக்கும் தொழிற்சாலை யில் வழக்கமான வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

கேள்விப் பத்திரங்களின் படிவங்கள் ராகம, வெலிசரையில் உள்ள பால்மா மீளவடைக்கும் தொழிற்சாலையின் கணக்காளரால் 1970 டிசம்பர் 2 ம் திகதி வரை மீளப்பெறக்கூடிய கட்டுப்பணம் 250 ரூபா செலுத்துவோருக்கு மட்டும் கொடுக்கப்படும்.

ஏனைய விபரங்களை ராகம வெலிசரையில் உள்ள பால்மா மீளவடைக் கும் தொழிற்சாலையின் வர்த்தக முகாமையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக்காரியாலயம்,
33, எலிபாங் தெரு,
கொழும்பு 5.

11–389—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## சிறைச்சாலைத் திணைக்களம்

### பாவிக்கப்பட்ட திணைக்கள வாகனங்களின் ஏல விற்பனை

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வாகனங்கள் 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 8 ம் திகதி, காலை 10.00 மணிக்கு கொழும்பு விளக்க மறியற்சாலையைச் சேர்ந்த "எஸ்கொற்" கிளையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் :—

1. 33 ஸ்ரீ 2026 மொரிஸ் கொமர்சல்
2. 33 ஸ்ரீ 2029 மொரிஸ் கொமர்சல்
3. 33 ஸ்ரீ 892 இண்டர் நசனல்

(1) இவ்வாகனங்கள் மேலே குறிப்பிடப்பட்ட இடத்தில் 1970 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ம் திகதி தொடக்கம், 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ம் திகதி வரை கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

(2) ஈற்றில் வாகனத்தைப் பெற்றவர்கள் அவ்விடத்திலேயே சேர வேண்டிய பணத்தைச் செலுத்தி 24 மணித்தியாலத்தில் பொருளை மீட்டுக் கொள்ள வேண்டும்.

(3) அரசாங்கம், ஏல விற்பனையில் பங்குற்றும் ஒருவரையோ பலரையோ எவ்வித கேள்வியுமின்றி நிராகரிக்கும் அதிகாரத்தை உடையது.

ஏ. ஏ. டீ. சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலை தலைமைக் காரியாலயம்,
கொழும்பு.
1970 ம் ஆு நொவெம்பர் மீ 4 ந வ.

11-340—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932.

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பிரசித்த ஏல விற்பனவு

800 கன யார் மதிக்கக்கூடிய பிறவெட்டு 27.11.70 காலை 9.00 மணிக்கு என்னுல் கிளிநொச்சி அரிவாலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். பிறவெட்டு 100 கன யார் தொகைகளாக விற்கப்படும்.

2. வாங்க விரும்புபவர்கள் பிறவெட்டை ஏலவிற்பனவின் முன் கிளிநொச்சி அரிவாலையில் சாதாரண நாட்களில் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் அரைப்போயா நாட்களில் காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரையும் சோதனையிடலாம்.

3. உரித்துடைய கேள்விக்காரர் எவ்வகையிலேனும் கொடுக்கப்பட்ட பிறவெட்டை தெரியவோ அல்லது நிராகரிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்.

4. கேட்ட பெறுமதியில் 10% பணத்தை அதே இடத்தில் உடனடியாகக் கட்டியும், மிகுதிப் பணத்தை எனது அலுவலகத்தில் 3 (மூன்று) நாட்களுக்குள்ளும் கட்டி முடிக்க வேண்டும். அவ்வாறு 3 நாட்களுக்குள் மிகுதிப் பணத்தை கட்டாவிடில், கட்டிய 10% பணத்தையும் இழக்க நேரிடலாம்.

5. உரித்துடைய கேள்விக்காரர் ஏல விற்பனவு திகதியிலிருந்து 2 கிழமைகளுக்குள் தனக்கென ஒதுக்கப்பட்ட பிறவெட்டை அரிவாலையிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

6. வாங்க விரும்புபவர்கள் ஏல-விற்பனவில் கொடுக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக நடக்க வேண்டும். மேலும் ஏல விற்பனவு பற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்க் கைச்சாத்திடுபவரிடமோ அல்லது கிளிநொச்சி அரிவாலை முகாமையாளரிடமோ அறிந்து கொள்ளலாம்.

சி. குமாரசாமி,
காணி அபிவிருத்தி அதிகாரி,
மாங்குளம்.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
மாங்குளம்,
1970 ம் ஆு நவெம்பர் மீ 1 ந வ.

11-285—12.11.70 ந் திகதிய வர்த்தமான இல. 14,932

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### பிரசித்த ஏல விற்பனை

இதன் கீழ் குறிக்கப்பட்ட பாவித்த பொருள்கள் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆந் தேதி கொழும்பு 7, நீட் வழியில் உள்ள அரசகரும மொழித் திணைக்களத்தில் மு. ப. 10.00 மணி அளவில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படுகின்றன. இப்பொருள்களை இந்தக் காரியாலயத்தில் கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். இப்பொருள்களை வாங்கியவர்கள் பணம் கொடுத்தவுடனே கொண்டு செல்லல் வேண்டும். காசோலைகள் ஏற்கப்படமாட்டா.

### ஏல விற்பனையாகும் பொருள்களின் விபரம்

| | | |
|---|---|---|
| (1) | நாற்காலிகள், தட்டெழுத்தாளர் சீராக்கக்கூடிய | 2 |
| (2) | தமிழ்த் தட்டெழுத்துப் பொறிகள், ரெமிண்டன் .. | 1 |
| (3) | குளிரேற்றிப் பெட்டி உறைகள் .. | 1 |

பீற்றர் பீ. அபேசேகர,
அரசகரும மொழி அலுவல்கள் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி, கொழும்பு—7,
1970 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 2 ஆந் தேதி.

11–292—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

---

## பொலிஸ் இலாகா

### ஏல விற்பனை

கீழே கொடுக்கப்பட்ட பாவித்த பொருட்களும் மற்றும் பாவித்த உடைகளும் குளியாப்பிட்டி உதவி பொலிஸ் அதிகாரியின் கந்தோரில் 1970 ம் வருடம் நவம்பர் 30 ம் திகதி (30.11.70) காலை 9.00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | பொருட்களின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | கட்டில் பலகை | 2 |
| 2. | சயிக்கிள் சீற் | 1 |
| 3. | கதிரைகள் (சாதாரணம்) | 2 |
| 4. | கதிரைகள் (கையுடன்) | 2 |
| 5. | அமுக்க விளக்குகள் | 4 |
| 6. | மேசை விளக்குகள் | 1 |
| 7. | அரிக்கன் விளக்குகள் | 1 |
| 8. | 4-கலன் தகரங்கள் | 33 |
| 9. | ஆங்கில தட்டெழுத்து யந்திரம் | 1 |
| 10. | மெத்தைகள் (தும்பு) | 17 |
| 11. | இரும்புத் தொப்பி | 3 |
| 12. | காக்கி கோட் | 17 |
| 13. | காக்கி புஸ்கோட் | 3 |
| 14. | காக்கி கட்டை காற்சட்டை | 24 |
| 15. | கம்பளி | 14 |
| 16. | கறுப்பு மழை அங்கி | 3 |
| 17. | மழை அங்கி பட்டியுடன் | 3 |
| 18. | ரப்பர் மழை அங்கி | 1 |
| 19. | பூட்ஸ் சப்பாத்து சோடி | 34 |
| 20. | தோட்டா உறை | 7 |
| 21. | தோல் பட்டி | 7 |
| 22. | சப்பாத்து சோடி | 145 |
| 23. | கன்வஸ் சப்பாத்து சோடி | 4 |
| 24. | பொலிஸ் தொப்பி | 135 |

மேற்கூறப்பட்டுள்ள பொருட்களை (29.11.70) காலை 9.00 மணியில் இருந்து மாலை 4.00 மணி வரை குளியாப்பிட்டி உதவி பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

உதவி பொலிஸ் அதிகாரி,
குளியாப்பிட்டி.

பொலிஸ் காரியாலயம்,
குளியாப்பிட்டி,
1970 ம் ஆு ஒக்ரோபர் மீ 30 ந வ.

11–240—12.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

## சுகாதார திணைக்களம்

### பால்பண்ணை—மனநோய் வைத்தியசாலை, அங்கொடை

கீழ்க்காணும் கால்நடைகள் 1970 ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 30 ந் திகதி காலை 10.00 மணியளவில் அங்கொடை மனநோய் வைத்தியசாலை பால்பண்ணையில் பொது ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

| கால் நடை இல. | விபரம் | ரகம் |
|---|---|---|
| 147 | அய்ஷயர் (கலவன்) | பசு |
| 171 | யோர்சி (கலவன்) | பசு |
| 175 | ஷை | பசு |
| 178 | ஷை | பசு |
| 179 | ஷை | பசு |
| 195 | ஷை | பசு |
| 212 | ஷை | பசு |
| 147 K | ஷை | நாம்பன் கன்று |
| 157 G | ஷை | ஷை |
| 171 J | ஷை | ஷை |
| 176 H | ஷை | ஷை |
| 177 G | ஷை | ஷை |
| 179 H | ஷை | ஷை |
| 179 I | ஷை | ஷை |
| 191 F | ஷை | ஷை |
| 198 F | ஷை | ஷை |
| 213 D | ஷை | ஷை |
| 214 D | ஷை | ஷை |
| 213 E | ஷை | ஷை |
| 225 B | ஷை | ஷை |
| 225 C | யோர்சி (கலவன்) | நாம்பன் கன்று |
| 231 B | ஷை | ஷை |
| 232 B | ஷை | ஷை |
| 234 B | ஷை | ஷை |
| 235 A | ஷை | ஷை |
| 243 A | ஷை | ஷை |
| 221 C | அய்ஷயர் (கலவன்) | ஷை |
| 228 C | ஷை | ஷை |

இக்கால்நடைகளை, அங்கொடை மனநோய் வைத்தியசாலை அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, போயாவும் அதற்கு முன்தினமும், அரசாங்க விடுமுறை தினங்களும் நீங்கலாக, மற்றைய வேலைநாட்களில் காலை 9 மணி முதல்—மாலை 4.30 மணி வரை பார்வையிடலாம்.

ஏலத்தில் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் விற்பனை முடிவில் முழுத்தொகையையும் செலுத்தி கால் நடைகளை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

கேள்விமுறையின்றி, கேள்விகளை, நிராகரிக்கவோ, விற்பனையை தற்காலிகமாக நிறுத்தவோ, அல்லது தள்ளுபடி செய்யவோ, மனோ வைத்திய சேவைகள் அதிகாரிக்கு உரிமை உண்டு.

இதையிட்ட மேற்கொண்டு விபரங்கள் அறிய விரும்புவோர் அங்கொடை மனநோய் வைத்தியசாலை அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வைத்தியர், வை. செனவிரட்ன,
பதில் ம. நோ. வை. சே. அ.

மனநோய் வைத்திய சேவைகள்
அதிகாரி காரியாலயம், அங்கொடை.

11–270—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,932

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், **தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நவெம்பர் | .. | 5.11.70 | வியாழன் | .. | 30.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | | பி.ப 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.